No. M. 330 'SIDDHANTHAM
Vol. 25—No. 2

540 / 152

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 25 | கர மாசி 1952 பிப்ரவரி | இதழ்

உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| காட்டு ஒலி | | 33 |
| திருஇலம்பையங்கோட்டூர் | | |
| ஓர் எண்ணுப் பெயர் | ... | |
| வரவேற்பிதழ் | ... | |
| வரவேற்புரை | ... | |
| சைவர் மகாநாட்டுத் திறப்புரை | ... | 52 |
| வரவேற்பிதழ் | | 56 |
| சைவ இளைஞர் மாநாட்டுத் தொடக்கவுரை | ... | 57 |
| சைவர் இளைஞர் மாநாட்டுத் தலைவர் உரை | ... | 1—16 |

OF THE REGISTRAR OF ... 
...ர் 952
MADRAS

எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
ர் : வித்வான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை
சித்தாந்த மகா சமாஜம்
முதலி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15

SL
R73ள211, N128
N52.752
186878



திருப்பேரூர் பட்டிப் பெருமான் ஆதியில் தோன்றிய வரலாற்றைச் சித்திரிக்கும் படம். இது கோயில் முன்னிலையில் உள்ள கொடிக் கம்பத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைபெறும் திருப்பேரூர்ப் பட்டிப் பெருமான் குடமுழுக்குத் திருவிழாவில் வெளியிட்டிருக்கும் பட்டிப் பெருமான் வரலாற்றில் இந்தப் படத்தின் முழு விவரமும் காணலாம்.

## செய்தித் திரட்டு

1. திருவெம்பாவை, திருப்பாவை மகாநாடுகள் :—சென்ற மார்கழித் திங்களில் ஸ்ரீகாமகோடி பீடத்து ஆசாரிய சுவாமிகள் ஆணையின்படி தமிழ்நாடு முழுவதும் மேற்கூறிய மகாநாடுகள் நடைபெற்றதை நாம் அறிவோம். 15-1-52ல் அமைப்புக் குழுவினர்கள் சுவாமிகளின் முன்னிலையில் கூட்டங் கூடி அடுத்த ஆண்டிலும் வெகு விமரிசையாக அம்மகாநாடுகளை நடத்தவேண்டுமென்றும், தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு இரு பாவைப் பாசுரங்களையும் மனப்

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 25 | கர மாசி 1952 பிப்ரவரி | இதழ் 2

## நாட்டு ஒலி

1. வழிபாடுகள் :—உலகத்திலே பல சமயங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு வகையான வழிபாடு உண்டு. சடங்குகளும் அவைகளுக்கு ஏற்றபடி அமைந்திருக்கின்றன. ஒரே சமயத்தில் வெவ்வேறு காலங்களில் வழிபாடுகள் மாறியும் இருக்கின்றன. அவ்வாறு மாறுபாடுகள் வெளிப்படையாகக் காணும்போது அவைகளைச் சீர்திருத்தவும் முற்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு சீர்திருத்துவதற்காகச் சமயத் தலைவர்களுடைய கூட்டங்கள் கூட்டி, அவர்களுடைய தீர்மானங்களுக்கு ஏற்க வழிபாட்டு ஒழுங்கையும், அதில் ஓதப்பெறும் பாடல்களையும் மாற்றியுமிருக்கிறார்கள். இந்தச் செய்தி உலக சரித்திரத்தில் காணப்படுகின்றது. ஒன்று, இரண்டு உதாரணங்களைக் கூறுவோம்.

பௌத்தசமயத்தில் வழிபாட்டின் ஒழுங்குகளைப் பற்றியும், பௌத்தர்களின் நடப்பு விதிகளைப் பற்றியும், பலதடவை பெருங்கூட்டங்களைக் கூட்டி அவைகளைப் பற்றித் தர்க்கம் செய்து, சிலமுடிவுகளுக்கு வந்திருக்கிறார்கள். பௌத்த மன்னர்கள் சிறப்பாக ஆண்ட காலத்தில் இப்படிப்பட்ட மகாநாடுகள் கூட்டப்பட்டன. மகத நாட்டில் அசோகர் காலத்திலும், காஷ்மீர் நாட்டில் கனிஸ்கர் காலத்திலும் மகாநாடுகள் கூட்டப்பட்டன. இவ்வாறு கூட்டப்பெற்றும் நடைமுறையில் வேறுபாடுகள் தோன்றிச் சமயப் பிரிவினைகள் ஏற்பட்டன. பௌத்தத்தில் மகா

யானம், ஹீனயானம் என்ற இரு பிரிவினைகள் ஏற்பட்ட
தற்கு இவ்வேறுபாடுகளே காரணம். சிங்களநாட்டில்
பௌத்தமதம் சிறந்து வளர்ந்திருக்கிறது. அப்படியிருந்தும்
அவர்களிடையே பல வேறுபாடுகள் உண்டு. இலங்கைச்
சரிதத்தை வாசித்தாலும் அனுராதபுரம், பொலன்நருவை
என்ற பண்டைய தலங்களில் உள்ள பௌத்த சின்னங்
களை ஆராய்ந்தாலும் அங்கிருந்த சமயவேறுபாடுகளைக்
காணலாம். தோபாராமம் முதலிய ஆராமங்களில் உள்ள
சின்னங்கள் இவ்வேறுபாடுகளை வற்புறுத்தும். இவ்வேறு
பாடுகளை நீக்கிச் சடங்குகளையும் வழிபாட்டினையும்
ஒழுங்குபடுத்தப் பலமுறை மகாநாடுகள் கூட்டப்பட்டன
என்று இலங்கைச் சரிதம் கூறுகிறது.

இனி பௌத்தசமயத்தைப் போலவே கிறிஸ்துவ சம
யத்திலும், இப்படிப்பட்ட மகா நாடுகள் அடிக்கடி கூட்டப்
பட்டன. அச்சமயத்திற்குக் கர்த்தரான கிறிஸ்து எதை
யும் எழுதிவைக்கவில்லை. அவர் வாய்மொழியாகச் சில உப
தேசங்கள் செய்துள்ளார். அவருடைய மாணுக்கர்களில்
சிலரே அவர் கூறியவை இன்னவையென்று எழுதினுர்கள்.
அவருக்குப் பிறகுதான் சமயநிலையம் (Church) ஏற்படுத்
தப்பட்டது. அந்நிலையத்தில் நடைபெற வேண்டிய வழி
பாடு நாளாவட்டத்தில் பல வேறுபாடுகளை அடைந்தது.
பொதுவாக வேறுபாடுகளே சச்சரவுகளுக்குக் காரண
மல்லவா? அதுபோல கிறிஸ்துவுக்குப் பிறகு இரண்டு
மூன்று நூற்ருண்டுகளிலேயே ஆராதனை வேறுபாடுகள்
மிகுந்தன. அவைகளைப் போக்கடித்து ஒரேவகையான
முறையைக் கொண்டுவருவதற்காக அம்மகாநாடுகள் கூட்
டப்பட்டன. அவ்வக்காலத்திலிருந்த சமயத்தலைவர்கள் கூட்
டங்களில் கலந்துகொண்டு தீர்மானங்களைச்செய்திருக்கிருர்
கள். அப்படியிருந்தும் கிறிஸ்துவத்தில் தற்போது பல
உட்சமயங்களும் வழிபாட்டு வேறுபாடுகளும் காண்கிறோம்.

இவ்வாறு உலக சரித்திர வரலாறு இருக்க, நமது
தென்னுட்டில் மட்டும், வேறுவிதமாக இருக்குமா? தாயு
மானவர் அருளியபடி சமயங்கள் கோடிகளாய் விட்டன.
வழிபாடுகளும் வேறுவேருய் விட்டன. சைவம், வைணவம்
என்ற இ[illegible]ரிவுகளிலும் உட்பிரிவுகள் எத்
தனை? [illegible]வைதிலும், [illegible]சைவம், சித்தாந்த சைவம்,

186878



சிவாத்துவித சைவம் முதலான பல வேறுபாடுகள் இருக்
கின்றன. ஆகவே சைவக் கோயில்களில் வழிபாட்டு வேறு
பாடுகள் இருக்கக் கண்டால் அவைகளில் வியப்பு ஏது
மில்லை. வழிபாட்டு விவரங்களும் யாதொரு மாறுதலும்
அடையவில்லையென்று சிலர் கூறியபோதிலும், சரித்திரப்
படி ஆராய்ந்தால், மாறுபாடுகள் தோன்றித்தான் இருக்
கின்றன. வழிபாட்டுமுறைகளில் சடங்குகள் அதிகமாக
ஆக மாறுபாடுகள் அதிகமாகுமல்லவா? சுருக்கினுல் மாறு
பாடுகள் குறையும்.

**2** தமிழ் நாட்டு நடைமுறை :—தமிழ் நாட்டில்
சைவக் கோயில்களில் ஆராதனை பெரும்பாலும் ஆகமங்
களின்படி நடைபெறுகின்றன. சில கோயில்களில் மட்டும்
வேதமுறையைப் பின்பற்றுகிருர்கள். அக்கோயில்கள் அத்
வைத மடங்களின் மேல்பார்வையில் இருப்பவைகள். பெரும்
பான்மையான கோயில்களில் ஆகமரீதியாக வழிபாடு ஏற்
பட்டிருப்பதோடு அவைகளை நடத்திவைக்க ஆதி சைவ
குருக்களே ஏற்பட்டிருக்கிருர்கள். நெல்லைச் சரகத்தில்
உள்ள திருச்செந்தூர் முதலிய சில ஆலயங்களில் மட்டும்
மலையாள சம்பிரதாயம் இப்பொழுது இருக்கிறது. ஏனைய
மாவட்டங்களில் எல்லாம் ஆதிசைவர்களுடைய ஆரா
தனையே நடைபெற்று வருகிறது. ஆதிசைவர்கள் ஆகமங்
களின்படிக்கும், ஆகமங்களிலிருந்து பொறுக்கி எடுத்து
வைத்திருக்கும் பத்ததிகளின் படிக்கும் வழிபாடுகளை
நடத்திவருகின்றனர். ஆகவே இவைகள் ஒரேவிதமாக
இருக்கவேண்டுமல்லவா?

ஆகமங்களோ இருபத்தெட்டு. அவைகளிலும் சிறப்
பாக உள்ளவை காரணம், காமிகம் முதலிய நான்கு.
இவைகளில் வழிபாடு வேற்றுமை உண்டு. தற்போது
பணியாற்றும் அர்ச்சர்களோ ஆகமங்களைப் படித்து அறியப்
போதிய படிப்புப் பெறவில்லை. ஆகவே ஆகமங்களின் சுருக்
கங்கள் ஆகிய பத்ததிகளையும், பூஜாவிதிச் சாத்திரங்
களையும் மட்டும் சிலபேர் வாசித்திருக்கிருர்கள். . பல
பேர் அவைகளையும் வாசிக்கவில்லை. இளவயதில் சில மந்
திரப் பாடங்களை மட்டும் உருவேற்றுக்கொண்டு அவைக
ளோடு திருப்தியடைந்து பணியாற்றிவருகிருர்கள். ஆகவே

ஆலயங்களில் ஒன்றுக்கொன்று வேற்றுமைகளைக் கொண்டிருப்பது வியப்பல்ல.

மேலும் பற்பல காலங்களில் பழயவை மாறியும், புதியவை புகுந்தும் இருக்கின்றன. பொதுவாகக் கூறின், சங்க காலத்து வழிபாட்டுமுறை தமிழிலேயே இருந்திருக்கவேண்டும். சமண, பௌத்த ஆதிக்கங்களில் வடமொழியில் வழிபாட்டு முறை தெற்கே வந்தது. அதனால் தென்னாட்டு முறை சிறிது மாறுதல் அடைந்திருக்கும். சைவ மறுமலர்ச்சிக் காலத்தில் அதாவது நாயன்மார் தோன்றித்தேவாராதிகளை அருளிச்செய்த காலத்தில், வழிபாட்டு முறையில் தமிழ்ப் பாசுரங்களே வழங்கப்பட்டன. பின்னர் சோழர் சாம்பிராச்சிய காலத்தில் மாபெரும் கோயில்கள் தோன்றின. அக் கோயில்களில் ஆராதனைகள் நடத்துவதற்காகச் சோழமன்னர்கள் வடநாட்டிலிருந்து ஆயிரக்கணக்காக வேதியர்களைத் தென்னாட்டில் குடியேற்றி ஆலயங்களில் அமர்த்தினார்கள். அப்பொழுது வடமொழியில் ஆராதனைகள் அதிகமாக ஏற்பட்டன. மேலும் சமயாசிரியர்கள் காலத்தில் தோன்றிய தேவாராதிகள் அருகிப்போய் சோழர்கள் காலத்தில் மீண்டும் எடுத்தாளப்பட்டன. அப்போது ஆலயவழிபாடுகளில் வடமொழி வழிபாட்டோடு தேவாராதிகளும் சேர்க்கப்பட்டன. இவ்வாறு மாறுபாடுகள் தோன்றின என்பர்.

இனி, திருமறைகளின் பகுதிகள் சில கூறுவதோடு இறைவனுடைய திருநாமங்களும் கூறப்படுகின்றன. இத்திரு நாமங்கள் பதினாறு, நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு என்றவகையில் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நாமாவளிகள் சைவ புராணம் முதலிய புராணங்களில் உள்ளவைகள். அவைகளும் பல வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன. இந்த நாமாவளிகளும் பிற்காலங்களில் அதாவது வடமொழிக் கலப்பு மிகுதியாக ஏற்பட்ட காலத்தில் வழிபாடுகளில் புகுந்தன என்று சொல்லவேண்டும்.

இனி, தமிழ்ப்பகுதியில் வழக்கத்தின்படி சில பாசுரங்கள் கூறப்படுகின்றன. இவைகளும் தலத்திற்குத் தகுந்தபடி மாற்றம் அடைந்திருக்கின்றன. ஆகவே, தற்போது காணும் வழிபாட்டு ஒழுங்கு ஓரேவிதமாக இல்லையல்லவா ?



**3.** திருமறை ஓதுதல் :—சிவாலயங்களில் தற்காலத்தில் வடமொழி மந்திரங்களும் தென்மொழித் திருமுறைகளும் ஓதப் பெறுகின்றன. அவைகளிலே வடமொழிப் பகுதியைப்பற்றிப் பொதுமக்களுக்குப் பொருள் விளங்காதவகையிலே எவரும் மிகுதியாகக் கவலை கொள்வதில்லை. தெரியாத மொழியில் கூறப்படுவதை, ஏன் ஒழித்துவிடக் கூடாது என்ற இயக்கமும் அண்மையிலே தோன்றியிருக்கின்றது. அதைப்பற்றி இங்கே தர்க்கிக்க வேண்டியதில்லை. தமிழில் ஓதப்படும் பகுதியை மட்டும் இங்கே சிறிது விரிவாகக் கூறுவோம். கோயிலில் தீபாராதனை ஆனவுடன் வடமொழி வேதங்களைக் கூறுவார்கள். அது முடிந்த உடன் தமிழ்த் திருமறைகளைத் தலத்து ஓதுவார் பாடுவார். அதனைப் பஞ்சபுராணம் பாடுவது என்று கூறுவார்கள். பொதுவாக, பிள்ளையார் துதியாகிய " பிடியதன் " பிறகு முருகன் துதியாகிய " சூரபன்மாவை " அல்லது " நங்கடம்பனை " என்ற பாடல்களைப் பாடித் தேவாரங்களில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், பாடல்களை முறையே கூறி, திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம் பதினோராம் திருமுறை, பெரியபுராணம், இவைகளில் ஒவ்வொரு பாடல்களைச் சொல்லி இறுதியில் திருப்புகழ் கூறுவார்கள். இது விசேடகாலங்களில் கையாளும் முறை. நித்தியவழிப்பாட்டில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் இவற்றில் ஒவ்வோர் பாடல் பாடுவார்கள். பிள்ளைத்தமிழ் சிலவேளைகளில் கூறினதும், வாழ்த்தோடு முடிப்பார்கள். இவைகளில் விசேட வழிபாடுகளிலும் நித்திய வழிபாடுகளிலும் சிலவற்றைச் சொல்லியும் குறுக்கியும் முடிப்பதுண்டு. சிறப்பாகப் பாடல் பெற்ற தலங்களிலும், புராணத் தலங்களிலும் அவைகளுக்குரிய பாடல்களைப் பாடுவதுண்டு. இதுதான் தமிழ்நாட்டில் ஓதப்படும் முறை.

இப்படியிருக்க, இதற்குப் புறனடையாக மார்கழி மாதத்தில் மட்டும் இம்முறை மாற்றப்படுகிறது. பஞ்சபுராணத்திற்குத் திருவெம்பாவை ஓதப்படுகிறது. ஆலயங்களில் மார்கழித் திங்கள் முழுமையுமே திருப்பள்ளியெழுச்சி ஓதுவார்கள். மடங்களிலும் சில ஆலயங்களிலும் திருவாதிரைக்கு முன்னர்ப் பத்து நாள்கள் திருவெம்பாவை

மட்டுமே ஓதுவார்கள். இவையன்றி இன்னும் சில வேறுபாடுகளும் உண்டு. இவ்வாறு ஏற்பட்டிருக்கும் வேறுபாடுகளைப் பற்றிச் சில ஆண்டுகளுக்கு முன் சித்தாந்தத்தில் ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. பல ஆலயங்களிலும் தோன்றியிருக்கும் மாறுபாடுகளை எடுத்துக்காட்டி அவைகளை ஒருமைப்படுத்தும் நோக்கத்துடன் அந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. அந்தக் காலத்திலேயே சில அறிஞர்கள் விடைகளும் எழுதினார்கள். ஆனால் மாறுபாடுகள் இன்னும் இருப்பதாகத் தோன்றுகின்றன.

ஆலயங்களில் விசேட காலங்களிலும், மூர்த்திகள் எழுந்தருளிச் செல்லும்போது பின்தொடர்ந்து செல்லும் தேவாரகோஷ்டியிலும், பொதுவாகச் சைவத் திருக்கூட்டங்களிலும், தேவாராதிகளை ஓதுவதற்கு முன்னர் ஆசாரிய வணக்கம் கூறுமுகத்தான் 'பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் பதம்போற்றி' என்ற நால்வர் வணக்கம் சொல்லித்தான் மற்றத் தேவாராதிகளை ஓதும் வழக்கம் உண்டு. 'தொல்லை இரும்பிறவி' என்ற வெண்பா திருவாசகத்திற்குக் குருவணக்கம் ஆகும். அதில் திருவாசகத்தின் பெருமை கூறப்பட்டது. சிவஞானபோதத்திற்கு 'மலர் தலை உலகம்' என்ற ஆசாரிய வணக்கத்தை அது ஒத்தது. ஆனால் கோஷ்டிகளிலும் திருக்கூட்டங்களிலும் ஆலயங்களிலும் அவ்வெண்பா கூறும் வழக்கம் தென்னாட்டில் இல்லை. அச்செய்யுள் காப்புச் செய்யுள் அன்று என்றும் குருவணக்கச் செய்யுள் என்றும் அறியவேண்டும். இது தமிழ்நாட்டுக் கொள்கை.

**4.** ஈழநாட்டு வழக்கம் :— பல நூற்றாண்டுகளாகத் தமிழ்ச் சைவர்கள் ஈழநாட்டில் குடியேறி சைவக் கொள்கைகளைப் பிசகாமல் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். அவர்களில் ஆறுமுக நாவலர்போன்ற மிகப் பெரியார்கள் தோன்றி அக்கொள்கைகள் பிறழ்ப்போகாமல் அணைகோலியிருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கும் அந்நாட்டில் சைவம் ஓங்கி நிற்கிறது. பழங்காலக் கொள்கைகளுக்கு ஏதாவது மாறுபாடு தோன்றினால் உடனே அதனைக் கண்டித்து நேராக்கும் முயற்சி அங்கே உண்டு. அம்முயற்சியை எடுத்துக்கொண்டு அதற்குவேண்டிய பரிகாரங்களைத் தேடும் அறிஞர்கள் பலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அறிஞர்கள்



எழுதும் கண்டனங்களையும் கூறும் பரிகாரங்களையும் வெளியிடுவதற்காகச் செய்தித்தாள்களும் ஆயத்தமாகக் காத்துக்கொண்டு இருக்கின்றன. இந்த உதவி இயக்கம் நம் நாட்டில் காண்பதரிது. சமயக் கொள்கைகளிலும், சடங்குகளிலும் எப்படிப்பட்ட மாறுதல் தோன்றினும், இந்நாட்டு அறிஞர்கள் 'எக்கேடு கெட்டால் என்ன' என்று பெருமையுடன் கூறி வாளாயிருப்பார்கள். தப்பித் தவறிச் சில அறிஞர்கள் அம்மாறுபாடுகளைக் கூறமுயன்றாலும் அவைகள் பேச்சளவில் நிற்குமேயன்றிப் பெரும் கூட்டங்களிலும் கூறார்கள். ஒருவேளை தைரியம் கொண்டு கூட்டங்களில் கூறினபோதிலும் செய்தித் தாள்களுக்கு அனுப்பமாட்டார்கள். நற்காலமாகச் செய்தித் தாள்களுக்கு அனுப்பினபோதிலும் அச்செய்தித் தாள்கள் வெளியிடமாட்டா. ஆகவே மாறுதல்களும், பிசகுகளும், கண்டனம் பெறுவதற்கும், திருத்தம் அடைவதற்கும் வழியில்லை. இனி ஈழநாட்டில் நடந்த ஒரு செய்தியைப் பற்றி இங்கே கூறுவோம்.

மார்கழி மாதத்தில் திருக்கோயில்களிலும், திருக்கூட்டங்களிலும் திருவாதிரைக்கு முன் ஒன்பது நாட்கள் திருவெம்பாவை மட்டும் ஓதும் வழக்கம் இருக்கின்றது. அவ்வாறு திருவெம்பாவை ஓதுவதற்கு முந்தியும் பிந்தியும் திருவாசகப் பாயிரச் செய்யுளாகிய "தொல்லை யிரும்பிறவி" என்ற வெண்பாவைக் கூறுவது வழக்கமாம். ஆனால் நாளது ஆண்டில் வெள்ளவத்தை, மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் சில நாட்கள் அவ்வெண்பா விடப்பட்டதாம். அர்ச்சகர் திருவெம்பாவை அருளிப்பாடுக என்று கூறிய உடன் அச்செய்யுள் சொல்லாமலே திருவெம்பாவை பாடப்பட்டதாம். இந்த மாறுபாட்டைக் கண்டித்துச் சைவத் திருவாளர் மு. இராமலிங்கம் அவர்கள் ஒரு ஐயவினா எழுப்பிவிட்டார்கள். அவ்வினாவை இந்து சாதனம், தினகரன், சுதந்திரன், ஞானபானு முதலிய பல செய்தித் தாள்களுக்கு அனுப்பி வைத்ததன்றிப் பல சைவ அன்பர்களுக்கும் எழுதிக்கேட்டிருந்தார்கள். மேலே கண்ட செய்தித் தாள்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். மற்றும் ஈழநாட்டுப் பெரியார்கள் பலரும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களையும் தெரியப்படுத்தி உள்ளார்கள். அவ்வபிப்பிராயங்களின்

படிகளை எடுத்துத் திரு. இராமலிங்கம் அவர்கள் எமக்கு அனுப்பியுள்ளார்கள். ஈழநாட்டுப் பெரியார்களின் ஒருமித்த அபிப்பிராயம் என்னவெனில், "தொல்லை இரும் பிறவி" என்ற பாடல் திருவெம்பாவைக்கு முன்னும் பின்னும் பாடப்பட்டே வருகின்றது என்பதாம். சிலபேர் மட்டும் அச்செய்யுள் வெறும் காப்புச் செய்யுள் என்றும், மாணிக்கவாசகருடைய வாக்கு அல்ல என்றும், தேவாரம் முதலிய அருட்பா ஓதும்போது "திருச்சிற்றம்பலம்" என்ற திருமொழியை ஓதுதல்போல அவ்வெண்பாவையும் ஓதுதல் சரியானதென்றும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

**5.** தமிழ் நாட்டு வழக்கம் :—திரு இராமலிங்கம் அவர்கள் தமிழ் நாட்டு வழக்கத்தை அறிவிக்கும்படி எமக்கும் ஒரு கடிதம் எழுதினார்கள். அதனை எமது சைவ அன்பர்களுக்குக் காட்டி அவர்களது அபிப்பிராயத்தையும் ஒட்டி விடையும் எழுதி அனுப்பினோம். தென்னாட்டில் எல்லா சைவாலயங்களிலும் மார்கழித் திங்களில் திருவெம்பாவை ஓதுவதுண்டு. திருக்கூட்டங்களிலும் வைகறையில் திருவெம்பாவை ஓதுவதுண்டு. ஆனால், "தொல்லை யிரும் பிறவி" என்ற செய்யுள் ஓதுவதில்லை என்று முன்பே குறித்துள்ளோம். பெரும்பான்மையாக இதுதான் வழக்கம். "தொல்லை யிரும்பிறவி" என்ற செய்யுள் மாணிக்கவாசகருடைய வாக்கு அல்ல. பின்காலத்தில் வந்த அபியுக்தர் ஒருவர் அதனைப் பாடியுள்ளார். அது திருவாசகம் முழுமையுமே வியந்து பாடினதாகும். "திருவெம்பாவை" என்ற பனுவலுக்குச் சிறப்பாக ஏற்பட்டதல்ல. மேலும் சில பெரியார்கள் அப்பாடலைப் பாடின அபியுக்தர் சிவபெருமானே என்று கூறுகிறார்களாம். அதற்கும் ஆதாரம் இல்லை. இதுதான் நாம் விசாரித்த அன்பர்களின் அபிப்பிராயமாகும். இந்தத் தோரணையில் விடையும் எழுதி அனுப்பப்பட்டது.

திருச்சி வானொலியில் "ஏட்டுச்சுவடிகள்" என்ற தலைப்பின்கீழ் "திருவாசக வியாக்கியானம்" என்ற ஏட்டுச் சுவடியைப் பற்றி ஓர் அன்பர் பேசியிருக்கிறார். (வானொலி Vol. XIV. No. 14) அதில் அடியிற் கண்டபடி கண்டிருக்கின்றது.



"இன்றும் திருவாசகப் பிரதிகளில் தொடக்கத்தில் காணப்பெறும் 'தொல்லை யிரும்பிறவி' என்று தொடங்கும் பாடல் தமிழ்ச் சங்கத்துள் சோமசுந்தரமே இறைவனாக எழுந்தருளிய - சுவாமி அருளிய துதி இப்பா - என்பது இவ்வுரையாசிரியர் கருத்து..............இனி உரையினுள் புகுவோம். முன்னே காட்டியபடி தொல்லையிரும்பிறவி என்னும் பாடல் இறையனாருடையது என்று கொண்டு தம் சித்தாந்தத்தை வினாவிடைகளால் முதலில் உறுதிப்படுத்துகின்றார்....."

தன் கடிதத்துடன் இந்தப் பகுதியைப் படி எடுத்து நண்பர் இராமலிங்கம் அவர்கள் எமக்கு அனுப்பியுள்ளார்கள். வானொலியை எடுத்துப் பார்த்ததில் அந்த ஏட்டுச் சுவட்டின் விபரம் முழுவதும் தெரிந்தது. வியாக்கியானத்தின் நடை மணிப்பிரவாளமாய் இருக்கின்றது. அது எழுதப்பட்டதும் பத்தொன்பதாவது நூற்றாண்டில்தான். ஆகவே இதனை ஆதாரமாகக் கொண்டு எந்த ஆராய்ச்சியில் இறங்குவதும் சரியல்ல. ஆகவே இதனை வைத்துக்கொண்டு வெண்பாவைக் கண்டிப்பாக ஓதவேண்டுமென்று சொல்வது பொருத்தமாக இருக்காது.

**6.** முறை எது :—சென்ற இரண்டு ஆண்டுகளாகக் கும்பகோணம், காமகோடி ஆதீனத்து ஆசாரிய சுவாமிகள் தென்னாட்டில் தெய்வக்கொள்கை பரப்புவதின் நோக்கமாக ஆங்காங்குத் திருவெம்பாவை, திருப்பாவை மகாநாடுகள் கூட்டி வருகின்றார்கள். அது தற்காலத்திற்கு ஏற்ற ஒரு சிறந்த முறையாகும். இந்த ஆண்டில் முப்பத்திரண்டு நகரங்களில் இம்மகா நாடுகள் கூட்டப்பெற்றன. சிறந்த சைவமக்கள் இந்த இயக்கத்தில் கலந்துகொண்டார்கள். பழனியிலும் கோவையிலும் நடந்த திருக்கூட்டங்களில் கோவைச் சைவப்பெரியார்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். அப்போது சைவ வைணவப் பாவைப் பனுவல்களிரண்டும் ஓதப்பெற்றன. திருவெம்பாவையை ஓதுவார்களும், திருப்பாவையைப் பாகவதர்களும் ஓதினார்கள். திருவெம்பாவை ஓதினபோது "தொல்லையிரும் பிறவி" என்ற செய்யுளை ஓதுவார்கள் பாடவில்லை. மடத்தார்கள் இரண்டு பாவைகளையும் அச்சடித்து வழங்கினார்கள். அவைகளிலும் இவ்வெண்பாவோ தனியன்களோ சேர்க்கப்படவில்லை. தருமபுரத்து ஆதீனத்தார்கள் வெளியிட்ட திருவெம்பாவை

பதிப்பிலும் சமாஜத்தார் வெளியிட்ட உரைப்பதிப்பிலும் பாயிர வெண்பா சேர்க்கப்படவில்லை. ஆகவே, தென்னாட்டில் வழங்கும் முறை எது என இச்செய்திகள் புலப்படுத்தும் எனலாம். என்றாலும் தமிழ் நாட்டில் பல்லாயிரமாகச் சிவாலயங்களும் திருக்கூட்டங்களும் இருக்கிறபடியால் அவைகளிலே வேறுவிதமாக நடப்பு முறைகள் இருக்கும் பட்சத்தில் அவைகளையும் தெரிவிக்கும்படி அன்பர்கள் இதன்மூலம் வேண்டிக்கொள்ளப் படுகிறார்கள். அவைகள் பின்னால் வெளியிடப்படும்.

---

தலப்பகுதி

# திரு இலம்பையங் கோட்டூர்

1. இடம் : இந்தத் தலம் கூவம் என்ற திருவிற்கோலத்திற்கு மேற்கே இரண்டு கல்லில் உள்ள ஊர். கூவத்திற்கும் இலம்பையங் கோட்டூருக்கும் இடையில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. மழைக் காலத்தில் இவ்வேரியைச் சுற்றிச் செல்லவேண்டும். அப்போது 4 கல் செல்லவேண்டும். ஊர் சிறிய ஊர். தற்போது இவ்வூர்க் குடிகள் பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் ஆகிவிட்டார்கள். இரண்டு மூன்று சைவக் குடிகள் மட்டும் கோயிலைக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கூவத்துக் கோயிலின் அறக்காப்பாளர் இக்கோயிலையும் பரிபாலித்து வருகிறார். அவரே கோயிலுக்குத் திருப்பணியும் செய்து வருகிறார்.

2. கோயில் : மிகப் பழைய கோயில். பாழடைந்து போய்த் திருப்பணி செய்யப்பட்டு வருகிறது. ஒரு நகரத்துச் செட்டியார் பொருள் உதவி செய்ய, அறக்காப்பாளர் அதனைச் செய்து வருகிறார். திருப்பணிக்குக் கற்கள் 30 கல் தொலைவிலுள்ள பட்டிமலைக் குப்பத்திலிருந்துகொண்டு வரப்படுகிறது. ஆகவே வேலை வெகு சாவகாசமாக நடைபெறுகிறது. தற்போது சுவாமி கோயில் பூர்த்தியாகி இருக்கிறது. அம்மன் கோயில் பழைய நிலையில் இருக்கிறது. முன் மண்டபம் வேலை பாக்கி. கோயில் திருக்குளம் செப்பனிடப் படவில்லை. அதனைக் கிறிஸ்தவர் குடிகளே பயன்படுத்துகிறார்கள்.



3. மூர்த்திகள் : சுவாமி - அறம் பேசுவர் (சந்திரசேகரர், தெய்வ நாயகர்) அம்மன் – கோடேந்துமுலை யம்மை (கனககுஜாம்பாள்); சுவாமி சுயம்பு மூர்த்தி. நீண்ட திருமேனி. ஆகவே அபிஷேகம் இல்லை. தற்போது எந்த உற்சவமும் நடைபெறுவதில்லை. அர்ச்சகர் கூவத்திலிருந்து வந்து பூசை செய்கிறார்.

4. ஐதீகங்கள் : அரம்பையர் பூசித்ததால் இவ்வூர் அரம்பையர் கோட்டூர் என்று ஆகிப் பிறகு இலம்பையன் கோட்டூர் என மாறிற்றாம். கோட்டூர் என்பது இயற்பெயர். மற்றக் கோட்டூர்களிலிருந்து வேறுபடுத்த இலம்பையங்கோட்டூர் என்று பெயர் ஆயிற்று. திருக்கூவப் புராணத்தில் அரம்பையர் பூசித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

“பன்னரும் புகழ்மேய கூவ புரத்தினிற் குடபாலினிற்
இன்னரம் புரைகொங்கை மேனகை கெண்டை யங்கணு ருப்பசி
முன்னரம் பையரிளமை நல்லெழின் முற்றுறு தரம் பேசரு
வென்ன வொண்சிவ லிங்கமொன்றை யியற்றியே வழிபட்டனர்”
(268)

இந்தக் கோயில்தான் இலம்பையங் கோட்டூர் ஆயிற்று.

5. நூல்கள் : சம்பந்தர் தேவாரம் “மலையினார் பருப்பதம்” என்ற பதிகம் உண்டு. “இலையினார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்” என்றும், “இருமலர்த் தண் பொய்கை இலம்பையங் கோட்டூர்” என்றும் வருதல் காண்க. திருக்கூவப் புராணத்தில் மேலே கூறிய பாடல் வந்துள்ளது.

6 கல்வெட்டுக்கள் : இடிந்த கோயிலிலே ஆறு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகளில் மூன்று சோழர் காலத்தவை; ஒன்று பாண்டியன் காலத்தது; இரண்டு வீரகண்ட கோபாலன் காலத்தவை ஆகும்.

சோழர்களில் குலோத்துங்கன் III, இராஜாதிராஜன் II (*1178—1186*) காலத்தவை. அவைகளின்படி இந்நாடு ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்துக் கான்றூர் நாடு ஆகும். ஊர் சோழ விச்சாதரச் சதுர்வேதி மங்கலம் என்ற கோட்டூர். சுவாமி-இலம்பையங் கோட்டூருடையார் என்பதாகும்.

இராஜாதி ராஜன் II காலத்தில் இக்கோயிலைக் கற்றளியாகப் பண்டாரி சிவசரணாலயன் என்ற சிவபாத சேகர் மூவேந்த வேளான் என்பவன் கட்டினான். (1178—1186) இவ்வூர்க் கோயிலுக்கு நந்தாவிளக்கு வைக்கவும் மற்ற ஆராதனைகள் செய்வதற்கும் பல தான தர்மங்கள் செய்யப்பட்ட செய்திகள் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளன.

இக் கல்வெட்டுக்களைத் தவிர, அடுத்துள்ள திருவாலங்காட்டுக் கல்வெட்டு ஒன்றில் (466/1905) இந்த இலம்பையங்கோட்டூரிலிருந்த நிலம் ஒன்றை அக்கோயிலுக்குத் தானம் செய்யப்பட்ட செய்தி அறிகிறோம். அடுத்துள்ள கூவத்தில் ஒரு கல்வெட்டு (338/1909) ஒன்றில் இவ்வூர்ச் சபையார் கூவத்து ஏரியான திரிபுவனமா தேவிப் பேரேரியிலிருந்து கால்வாய் வெட்டித் தம் ஊருக்கு நீர் கொண்டுபோக ஒரு நிலம் தானம் செய்தசெய்தி கண்டிருக்கிறது. ஆகவே இவ்வூர் நிலங்களுக்குக் கூவத்து ஏரியின் நீர் பாய்ந்தது எனக் காண்கிறோம். அது நடந்தது இராஜேந்திர தேவன் (1052 - 63) காலத்தில் ஆம். அக்கல்வெட்டிலும் இவ்வூர்ப் பெயர் சோழ வித்தியாதரச் சதுர்வேதி மங்கலம் என்ற கோட்டூர் என்று கூறப்பட்டது.

அக்காலத்தில் சதுர்வேதி மங்கலமாக - அதாவது பிராமணர் அக்கிரகாரமாக இருந்த ஊர் இப்போது கிறிஸ்தவர் சேரியாக மாறினது குறிக்கத்தக்க செய்தி.

---

ஆராய்ச்சிப் பகுதி

# ஓர் எண்ணுப் பெயர்

(தருமையாதீனப் புலவர் - முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்)

பண்டையநாளில், செந்தமிழிலேயிருந்த எண்ணுப் பெயர்கள் பல, இற்றை நாளில் குறியுந் தெரியாது, மறையும் வண்ணம் வழக்காறற்ற நிலையை யெய்தின. எய்தவே, அவ் வெண்ணுப் பெயர்கள் அமைய இயற்றிய செய்யுட்களுள் அவற்றின் பொருள் செவ்விதின் அறிய இயலாமல் வழூப்படக் கொள்ளலாயிற்று.



பரிபாடலின் இரண்டாவது பாட்டில் வரும்

" நெய்தலுங் குவளையும் ஆம்பலுஞ் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி யீட்டங் கழிப்பிய வழிமுறை " (13—15)

என்னும் மூலத்தையும், " நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும் கமலமும் வெள்ளமும் என எண் குறித்திட்ட பெயர்களது அளவிற்றகிய காலவீட்டம் கழிந்தபின் " என்னும் உரையையும் நோக்கின், நெய்தல், குவளை, ஆம்பல் என்னும் எண்ணுப் பெயர்கள் முன்னிருந்து வழங்கிய வுண்மை புலனாம். சங்கம் கமலம் என்பவை ' சங்கநிதி ' ' பதுமநிதி ' எனப் பிற்றைய நூலினுங் குறிக்கப்பட்டன. ' வெள்ளம் ' என்னும் எண்ணுப் பெயர், இன்றைய உள்ளமும் அறிவதே.

தொல்காப்பியர், புள்ளிமயங்கியலுள் (கூஅ)

" ஐ அம் பல் என வரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும் "

என்பதில், தாமரை (கமலம்) என ஐகார வீற்றிலும், வெள்ளம் என ' அம் ' ஈற்றிலும் ஆம்பல் எனப் ' பல் ' ஈற்றிலும் முடியும் எண்ணுப் பெயர்களைக் குறித்துளார். அதனுரைகள் அவற்றை வெளிப்படுத்தின. அவை தாமரை முதலிய பொருள்களை யுணர்த்தும் பெயர்களாலே, அன்றி எண்களை யுணர்த்தும் பெயர்களுமாதலைக் குறிக்க, ' அல்பெயரெண் ' என்றார். அஃதாவது (பொருட்) பெயரல்(லாத) எண்(ணுப்பெயர்) என்பதாம். ஆகவே, அவையும் அன்னோரன்ன பிறவும் எண்களைக் குறித்து வழங்கிய பழந்தமிழ்ப் பெயர்கள் என்பதுறுதியாயிற்று. ஆயினும், நம் தீவினைப்பயனாக இந்நாளில், அத்தகைய செந்தமிழ்ப் பெயர்கள் எண்குறித்து வழங்கலின்றி, ஆயிரம் என்பதன் மேற்பட்ட எண்களைக் குறிக்க வேற்றுமொழியிலிரவல் வாங்கிக்கொள்ளல் நேர்ந்தது. இந்நேர்ச்சி நன்றோ தீதோ யாதாயினும் ஆகுக. இவ்விரவல் படுத்தும் பாட்டை நோக்குமின் செந்தமிழ்ச் சான்றோரே !

அம் என முடியும் எண்ணுப் பெயர்களுள், ' தோழம் ' என்பதும் ஒன்றாகும். அது கல்வெட்டு ஒன்றனுள் இருக்கின்றதுஎன நண்பரொருவர் சொல்லினார். சொல்லியும் அது

வந்துள்ள இடத்தைக் குறித்தாரல்லர். யாம் குறித்த ஈரிடத்தையும் அவர் குறித்துக்கொண்டு சென்றார். திங்கள் சில கடந்தும் எழுதினாரல்லர். பிறர் எவரேனும் அறிந்து எழுதலாம் என்றெண்ணி, இதில் குறிக்கின்றேம்.

மாணிக்கவாசகப் பெருமானார், காழிவேந்தர், மொழி வேந்தர், நாவலர் வேந்தர் மூவர்க்கும் மிக முற்பட்ட காலத்தவர் என்பது அறிஞர் பலர் கருத்து. அவர் அருளிய திருவெம்பாவை (கo), இவ் வெண்ணுப்பெயரை இனிதுணர்த்துகின்றது.

சிவபெருமான் தொண்டரையுடையவன், அவர்க்கு உள்ள தொண்டர் தம் தொகையோ ஒரு தோழம். அவரனை வரையும் வேதமுதலியனவும் விண்ணவரும் மண்ணவரும் ஓதத் தொடங்கி ஓதிவரின், அவ்வோதலுக்கு எப்பொழுதும் முடிவு எய்தாதாம். அவ்வோதலினளவிற் குட்படாத பெருமையைக் குறிக்கும் எண்ணே தோழம் என்பது. ‘உலவா’ என்னும் எதிர்மறைப் பெயரெச்சத்தினைச் சிவபெருமானுக் கேற்றிக் கூறினும், இவ் வெண்ணுப் பெயர் வேறு பெயராகாது.

‘பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்’ எனத் திருவடியும், ‘போதார் புனைமுடியும் எல்லாப் பொருண் முடிவே’ எனத் திருமுடியும் உணர்த்து முகத்தான் பரப்பிரமத்தைக் குறித்தருளினார். அது உயிர்கட்கு அருளக் கொள்ளுஞ் சதாசிவத் திருமேனியைப் ‘பேதையொருபாற் றிருமேனி யொன்றல்லன்’ என்றருளினார். அவ்வருள் பெற்ற தொண்டர் அளவிலர் என்னப் பல்கிய புகழை உணர்த்த “வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும் ஓதஉலவா ஒரு தோழந் தொண்டருளன்” என்றருளினார். இங்குத் தோழன் என்று ஆண்பாற் பெயராக அமைய எல்லாப் பதிப்பும் பெற்ற வினை எதனால் விளைந்தது? பழைய வழக்கு வீழ்ந்ததனாலன்றோ? தவறிய இடனெல்லாம் பொருள் கொள்ளப் புலவர்க்குத் திறம் குறைவின்றியுள தெனினும், உண்மையை உணர்ந்துரைக்கும் ஏற்றம் ஆண்டுத் தோன்றுமோ?

திருஞானசம்பந்தப் பெருமான், தமக்குப் பாலை அளித்தருளிய திருப்புறவத்திறைவன் நஞ்சுண்ட வரலாற்றை விளைந்தருளினார். அந்நஞ்சு எவரும் உண்ணற்கரியது.



உண்டாலும் கண்டத்தில் அடக்குதல் அதனினும் அரியது. ஆண்டு அடக்கினும் விடுக்கினும் சாவாதொழிதல் அரிது. அவ்வருமைச் செயலைச் செய்து ஏந்திய வெற்றிக்கொடி, விடைக்கொடி. அக்கொடி அன்னதானக் கொடியுமாயிற்று. அன்னமோ? அன்று. அமுதம். அமுதுண்டார் எவர்? தேவர். அவர் எத்துணைவர்? உண்டு எங்கு வாழ்ந்து விளங்குகின்றனர்? விடையை எதிர்நோக்குவோர்,

“உண்ணற் கரிய நஞ்சை உண்டு ஒரு தோழந்தேவர்
விண்ணிற் பொலிய அமுதம் அளித்த விடைசேர்
கொடியண்ணல்”

என்றுந் திருவடிகளை வணங்கியுய்யலாம்.

இங்குத் தேவர் எண்ணைக் குறிக்கும் பெயர் ‘தோழம்’ என்பது வெள்ளிடைமலையன்றோ!

இனியேனும், திருவாசகத்தைப் படிக்கும் அன்பர் ஒரு தோழன் றொண்டருளன் என்னும் பிழையைத் தீர்க்க முயல்க. ‘எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.’ ‘எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு’ என்னும் இரண்டும் இங்கு நோக்கத்தக்கன.

---

# வரவேற்பிதழ்*

அழகிய சொக்கரும் அங்கயற் கண்ணியும்
குழகனும் மயிலமர் குமரனுங் கூடி
இழுமென் மொழித்தமிழ் ஒழுகுறுஞ் சுவையைக்
கூட்டுணுங் கன்னி நாட்டகத் திசைதவழ்
குன்றக் குடியெனு நன்றமர் தலத்திற்
சைவசித் தாந்த மகாசமா சத்தின்

* இது சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தார்கட்குக் குன்றக்குடியில் கர மார்கழி 7உ (22-12-51) நிகழ்ந்த 46-வது ஆண்டுவிழாவில் காரைக்குடி, சிவநேசர் திருக்கூட்டத்தாரால் வழங்கப்பட்டது.

நாற்பத் தாறெனு நயமிகு ஆண்டின்
நிறைவிழா நிகழ்த்தவும் இறைதிரு வருள்நெறி
பரப்பவும் ஈண்டு பாங்குட னெழுந்தருள்
திருத்தகு நல்லீர் ! திகழும் அன்பரீர் !
வருக ! வருக ! மகிழ்தர வருக !
நாதனைத் தொழுதுமை நல்வர வேற்று
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்து நின்றனமால் ;
தமிழகம் செய்த தவப்பயன் விளங்கவும்
சைவப் பெருநெறி தழைத்தினி தோங்கவும்
இறைவனார் தளிகள் எய்திவழி பட்டு
மன்னுயிர்த் தொண்டுகள் மாண்பொடு புரிந்து
சித்தாந்தம் என்னுந் தேனமு தத்தினை
வாரி வழங்கும் வள்ளன்மை பூண்டு
புண்ணி யப்படையெழுச்சிபோற் பொலிய
எய்தினிர் ; நுங்கள் இசை வாழியரோ !
‘ சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக ’
எனுங்குறிக் கோளுடன் இறைபணி நிற்கும்
சிவநேசர் கூட்டந் திகழுறும் அன்பராம்
எங்கட் குடனுறை வின்பம் நல்கினிர்,
உங்கள் அருளுரை யோர்ந்தித் தரையினர்
திருவருள் வாழ்வில் திளைத்தின் புறுக !
தமிழகங் காக்குந் தகைசேர் சமாஜம்
கருணைத் தடங்கடற் கண்ணுத லருளாற்
சிவநெறி பரப்பிச் சிறந்துமிக் கோங்குக !
மன்றுளார் அடி யாரவர் வான்புகழ்
சென்றுல கெங்கணும் நின்று நிலவுக !
வாழிமெய் யன்பர் ! வாழிய உலகே !

சிவநேசர் திருக்கூட்டத்தார்

---

**சைவ சித்தாந்த மகா சமாஜ 46-வது ஆண்டு விழா**

வரவேற்புக் குழுத் தலைவர்

திரு. க. வீ. அழ. மு. இராமனாதன் செட்டியாரவர்களின்

# வரவேற்புரை

## குன்றக்குடி - மார்கழி 7உ (22-12-51)

*வான் ஆகி, மண் ஆகி, வளி ஆகி, ஒளி ஆகி,*
*ஊன் ஆகி, உயிர் ஆகி, உண்மையும் ஆய், இன்மையும் ஆய்,*
*கோன் ஆகி, யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு*
*வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.*

**பெரியோர்களே ! சகோதர சகோதரிகளே !**

அம்மையப்பன் திருவருளால் சென்ற நாற்பத்தாறு ஆண்டுகளாக நற்பணி புரிந்து வருவது நமது சைவ சித்தாந்த மகா சமாஜம். பல நூல்கள் பதிப்பித்தும், பல பெரியோர் பிரசங்கம் பண்ணுவித்தும், பல வகுப்புகள் நடத்தியும், பல மகாநாடுகளைப் பாங்குறக் கூட்டியும், சமாஜம் ஆற்றிவரும் தொண்டுகளை எல்லாம் நாடறியும் ; நல்லோர் அறிவர். சமய நூல்களையும், தமிழ் இலக்கிய நூல்களையும், திருத்தமாகவும், விளக்கமாகவும் அச்சிட்டு அடக்க விலைக்கே கொடுத்து வந்தமை, மொழியும் சமயமும் வளர எவ்வளவு பேருதவியாக இருந்தது என்பதை நாம் நன்கறிவோம்.

இன்று சமாஜத்தின் 46-ம் ஆண்டு நிறைவு விழா. அதை நாம் சைவத் திருநெறி மகாநாடாகவே மிக்க ஆர்வத்துடன் கொண்டாடுகிறோம். இந்த மகாநாடு, சைவர் மகாநாடு, இளைஞர் பேரவை, மங்கையர் பேரவை என்று மூன்று பிரிவுகளாக நடைபெற இருக்கிறது. சைவர் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க உயர்திரு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரவர்கள் அன்புடன் இசைந்திருக்கிறார்கள். இளைஞர் பேரவைக்கு, பண்டிதர் முத்துவேங்கடாசலம் அவர்கள் தலைமைதாங்க அன்புடன் இசைந்திருக்கிறார்கள். மங்கை

யர் பேரவைக்குத் திருமதி. எஸ். ராஜேஸ்வரி அம்மையார் அவர்கள் தலைமை தாங்க அன்புடன் இசைந்திருக்கிறார்கள். மகாநாட்டைத்தொடங்கிவைக்கத் தமிழ் வள்ளல்-மெய்யப்ப செட்டியார் அவர்கள் அன்புடன் இசைந்திருக்கிறார்கள். இன்னும் பல பேரறிஞர்கள் பொருளுரை நிகழ்த்த அன்புடன் இசைந்துள்ளார்கள். அவர்கள் யாவருக்கும், சைவ சித்தாந்த மகா சமாஜத்தாருக்கும், மற்றும் மகாநாட்டிற்கு வந்திருக்கும் உங்கள் யாவருக்கும் வரவேற்புக் கழகத் தலைவன் என்ற முறையில் நல்வரவு கூறி வரவேற்கிறேன்.

இந்த மகாநாடு இங்கே நடைபெறுவதற்குப் பெருங் காரணமாக இருப்பது திருவண்ணாமலை ஆதீனமே. திருவண்ணாமலை ஆதீனம் சமீபகாலமாக மலைவிளக்காய்ச் சுடர்விட்டுப் பிரகாசிப்பதை நாம் நன்கறிவோம். ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக ஸ்வாமிகள் இங்கு எழுந்தருளியதே இந்த மறுமலர்ச்சிக்கெல்லாம் ஒரு தனிக் காரணம் என்பதை நான் சொல்லவா வேண்டும்! துறவியின் லட்சணத்திற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாய் இலங்கிவரும் அவர்கள் நிறைந்த கல்வியும், சிறந்த ஒழுக்கமும், பரந்த மனமும் படைத்து "என்கடன் பணிசெய்து கிடப்பதே" எனக் கொண்டு சைவப் பயிரும் தமிழ்ப் பயிரும் தழைத்தோங்கச் செய்து வரும் திருப்பணிகளால் நமக்கெல்லாம் அவர்களிடம் எல்லையில்லாத பேரன்பும் பெருமதிப்பும் ஏற்பட்டிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்திலே அவர்களுக்கு நமது நன்றிப் பெருக்குடன் கூடிய வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

இம்மகாநாட்டிற்குத் தலைமை ஏற்க இசைந்துள்ள உயர்திரு ராமசாமி ரெட்டியார் அவர்கள் தெய்வ பக்தியும், சீரிய ஒழுக்கமும், நேரிய மனமும் படைத்தவர்கள். உள்ளமும் செயலும் உரையும் தூயவர்கள். இந்தப் பகுதிக்கு அவர்கள் பெருந்துணை புரிந்தவர்கள். அழகப்பா கல்லூரியைத் திறந்து வைத்தவர்கள் அவர்களே. மின்சார ரசாயன ஆராய்ச்சிக் கழகம் காரைக்குடியிலே அமையப் பெரும்பாடுபட்டவர்கள் அவர்களே. அவர்களின் திண்ணிய எண்ணத்தாலும், செவ்விய கைராசியாலும், அழகப்பா கல்லூரி, அவர்கள் கூறிய ஆசிப்படியே ஒரு சர்வகலாசாலையாகும் நிலைமைக்கு வெகு வேகமாய் வளர்ந்துகொண்டு வரு



கிறது. மின்சார ரசாயன ஆராய்ச்சிக் கழகமோ, ஆசியாவிலேயே ஒப்பற்றதாய் விளங்கும் என அறிஞர்கள் கருதுகிறார்கள். மனமும், வாயும், கரமும், செம்மை சான்ற அத்தகைய பெரியார் ஒருவர் தலைமைதாங்க இசைந்தது நமது பெரும் பாக்கியமே.

"சைவத்தின் மேற்சமயம் வேறிலை, அதில் சார்சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம் இல்லெனும்"

உண்மைகளை யெல்லாம் அறிஞர் பலர் நமக்கு எடுத்து விளக்க இருக்கிறார்கள். அவற்றை யெல்லாம் கேட்டுப் பயன்பெறும் பாக்கியவான்களாகவும், பாக்கியவதிகளாகவும் நாம் இருக்கிறோம். இத்தகைய பெரும் பாக்கியத்தை நமக்கெல்லாம் நல்கி யருளிய அண்ணாமலையான் அடிக் கமலத்தை வாழ்த்தி வணங்குவோமாக.

தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இம் மகாநாட்டிற்குச் சகோதரர்களும், சகோதரிகளுமாகப் பலர் விஜயம் செய்திருக்கிறீர்கள். உங்கள் யாவருக்தும் நாங்கள் ஏதோ எங்களால் முடிந்த அளவு வசதிகள் செய்திருக்கிறோம். உங்கள் பெருந் தகுதிக்கும் தேவைக்கும் ஏற்க, பூரணமாக வசதிகள் செய்ய முடியாமல் தவறி இருப்போம். அவற்றையெல்லாம் நீங்கள் எங்கள் திறமைக் குறைவால் ஏற்பட்டவை எனக் கொண்டு பொறுத்தருள் வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மீண்டும் உங்கள் யாவருக்கும் வரவேற்புக் கழகத்தின் சார்பாக நல்வரவு கூறி வரவேற்பதுடன் தமிழ் வள்ளல் மெய்யப்ப செட்டியார் அவர்களை இம் மகாநாட்டைத் தொடங்கி வைக்கும் படியும், ஓமாந்தூர் உயர்திரு ராமசாமி ரெட்டியார் அவர்களைத் தலைமை ஏற்கும்படியும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

எந்நாட்டவர்க்கும் இறைவனும் தென்னாடுடைய சிவ பெருமான் திருவருளால் இம் மகாநாடு சிறப்புற நடந்து பெரும் பயன் விளைக்க நீங்கள் யாவரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லோருக்கும் வணக்கம்.

186828

சைவ சித்தாந்த மகா சமாஜ 46-வது ஆண்டு விழா

# சைவர் மகாநாட்டுத் திறப்புரை

திறப்பாளர் :

சைவ சித்தாந்தப் புரவலர், “ தமிழ் வள்ளல் ”

உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்பசெட்டியார் அவர்கள்

குன்றக்குடி - மார்கழி 7உ - (22—12—51)

*களித்துக் கலந்ததோர் காதற் கசிவொடு காவிரிவாய்க்*
*குளித்துத் தொழுதுமுன் னின்றவிப் பத்தரைக் கோதில்செந்தேன்*
*தெளித்துச் சுவையமு தூட்டி யமரர்கள் சூழிருப்ப*
*அளித்துப் பெருஞ்செல்வ மாக்குமை யாற னடித்தலமே.*

—திருநாவுக்கரசர்

திருவருட் பெருஞ் செல்வராக இங்கு எழுந்தருளியிருக்கின்ற மகாசந்நிதானம் அவர்கள் திருவடிக்கமலங்களுக்கும் பெரியோர்களுக்கும் வணக்கம்.

**சித்தாந்த சைவச் செந்நெறிச் செல்வர்களே ! செல்விகளே !!**

ஓரும் வேதாந்த மென்று உச்சியிற் பழுத்த ஆரா இன்ப அருங்கனி பிழிந்து சாரங் கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுதை அருந்துதற்குரிய நல்வாய்ப்பு, இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்வாய்ப்பை நமக்குரிமையாக்கித் தந்துள்ள சைவசித்தாந்த மகா சமாஜத்திற்கும், மாநாட்டு வரவேற்புக் குழுவுக்கும் நாம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம்.

சான்றவர் ஆய்ந்திடத் தக்க சைவசித்தாந்த நுண் பொருள்களைத் தெளிவுபடுத்தி விளக்கும் இம்மகா நாட்டைத் திறந்து வைக்க, அறிவான்ற பல பெரியோர்கள் இருக்கிறார்கள். அவர்களை விட்டு இப்பணிக்கு உரியவனாக அடியேனை ஆக்கியமைக்கு எனது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**பெரியோர்களே !**

நாட்டிலே வாழ்க்கைப் பொருள்கள் பற்றிய பஞ்சம் வேரூன்றித் தலைவிரித் தாடுகின்றது. செல்வப் பொருளுக்குக் குன்றநேர்ந்து, அதனால் ஏற்படுகின்ற வறுமைநிலை



மக்களைப் பெருந்துன்பத்திற்கு ஆளாக்க மாட்டாது, வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு உடையாதியன பற்றிய பஞ்சம் நம்மைப் பற்றி யிருப்பதால், அளவுகடந்த துன்பத்திற்கு ஆளாகி வருகிறோம்.

உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் இல்லாது பல மக்கள் பாடுபடுகின்ற இந்த நாளிலே இப்படிப்பட்ட சமயப் பேரவைகள் வேண்டுமா என்று நம்முடைய தோழர்கள் கூக்குரலிடுகின்றனர். உலகியல் வாழ்க்கைக்கே அவதியுறும் இந்த நாளில் கண் காணா வாழ்க்கையைக் கருதிக் காலத்தையும் பொருளையும் செலவிடுவது பொருந்தாததுதான் என்று புத்தறிவு படைத்த நமது இளைய சகோதரர்கள் தோழர்களின் பல்லவிக்கு அநுபல்லவி பாடத் தொடங்கி விடுகிறார்கள்.

“தேரான் தெளிவு, தீரா இடும்பைதரும்” என்று திருவள்ளுவர் பெருமான் கூறுகிறார். உலகியல் வாழ்க்கையில் உற்ற துன்பங்களுக்கு அடிப்படையான காரணமென்ன என்பதைச் சிறிதளவாவது சிந்தித்தல் வேண்டும். உலகத்திலே உடல்கொண்டு பிறந்துள்ள உயிர்கள், எத்தனையோ கோடிக் கணக்கானவை. “ உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம் ” என்பது ஆளுடைய பிள்ளையார் திருவாக்கு.

அத்தனை உயிர்களிலும், அறிவில் மேம்பட்டவன் மனிதனே என்று பெருமை பாராட்டிக் கொள்ளுகிறோம். தோன்றிய நாள்தொட்டு, ஒரே நிலையில் உண்டுறங்கி உயிர்விடுபவை மற்றை உயிர்த் தொகுதிகள். மனிதனோ, நாளுக்கு நாள் நாகரீகம் பெற்றுப் புத்தம் புதிய ஆராய்ச்சிகளில் தலைப்பட்டு வெற்றி கண்டு முன்னேறிவருகின்றானென்று பேசப்பெறுகிறது.

அறிவிற் சிறந்த மனிதன் அறிவைப் பயன்படுத்திக் காண்பது அவதிக்குரியதா யிருக்கலாமா ? என்று மனிதத் தோற்றம் உலகத்தில் உண்டாகியதோ, அன்று முதல் தமிழ் நாட்டு மக்களின் ஊனோடு உயிரோடு உடன் கலந்து உலவிய பண்பாடு, அவ்வாராய்ச்சியின் பயனாக அழிந்து போவது நியாயமாகுமா ?

அறிவு வளம் பெற்ற மனிதன், அறிவைத் துணைக்கொண்டு, அறிவுக் கறிவான ஆண்டவனை அடைய முற்

படுவதன்றோ ஆன்ற செயலாகும்? தோன்றிப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் ஆகியும், முன்னேற்றம் பெறாது ஒரே நிலையில் வாழுகின்ற உயிரினங்களின் வாழ்க்கையின்பத்தில், ஏதேனும் குறைபாடு காணமுடியுமா?

மனித வாழ்க்கையில் நாள் நாளும் வருகின்ற அல்லலுக்கு அளவே யில்லையே! பாடுபட்டு உழைத்து உண்ணாத பறவை விலங்குகளுக்குக் கூட இல்லாத பங்கீட்டு முறை, மனித இனத்திற்கு மட்டுந்தானே வந்துள்ளது? அறிவு கொண்டு ஆராய்கின்ற ஆற்றல் படைத்த மனிதன் — அணுகுண்டு வரை கண்டுபிடிக்கும் பேராற்றல் படைத்த சூரன் — வயிறார உண்ணுதற்கு வழி கண்டுபிடிக்க முடியாது மயங்குவது வியப்பா யிருக்கிறதல்லவா?

நன்றாக ஆலோசித்தால் நாம்காணுகின்ற முடிவுஒன்றுதான். அது, மனிதன் செயலாற்றும் ஆற்றலுடையவனேயன்றிக், குறித்த பயனைக் குறித்தபடி பெறும் ஆற்றல் உடையவனில்லையென்பது. எல்லாவற்றையும் கண்டு ஏற்ற பயனைத் தருபவன் இறைவனே என்று அறிவுக் கருவூலங்களாக விளங்கிய நமது ஆன்றோர்கள் முடிந்த நிலையில் அறிந்துரைத்தார்கள்.

மனித வாழ்க்கையில் உலகியல் பற்றிய உழைப்பு ஒரு சாரும், இறையியல் பற்றிய உழைப்பு இன்னொரு சாருமாக இருத்தல் வேண்டுமென அவர்கள் வற்புறுத்தினார்கள். அவ்வாறு உழைத்து வாழுகின்றவனே மனித நிலையில் வாழுகின்றவன் என்று கருதினார்கள். அல்லாத வாழ்க்கையுடையவரைப் பொல்லாதவர்களென்று அவர்கள் முடிவு செய்தார்கள். "தலையினிழிந்த மயிரனையர் மாந்தர், நிலையினிழிந்தக் கடை" என்ற தமிழ்மறை இதனையே வலியுறுத்துகின்றது.

"நிலை தடுமாறேல்" என்று பள்ளிப் பிள்ளைகளுக்குப் பண்பு சொல்லி வைத்தாள் தமிழ் மூதாட்டி. நிலையே மனிதனை மனிதனாக வைப்பது. அது மாறுபட்டால் துன்பமே உண்டாகும். மற்றை உயிரினங்களெல்லாம் நிலைமாறுபடாதுவாழ்வதனாலேதான் ஒரே படித்தான இன்ப துன்பத்தை நுகர்ந்து வருகின்றன.

மனிதனுக்கு வரவரத் துன்ப மிகுதியும் இன்பக் குறைவும் ஏற்பட்டு வருவதற்கு அடிப்படையான காரணம்



அறிவுநிலைத் தடுமாற்றந்தானென்பதை உணர வேண்டும். பண்டையோரின் அறிவு, மக்கள் வாழ்வு வளமுறுவதற்கு வேண்டியதைச் செய்யப் பயன்பட்டது. இன்றோ. பிறரைக் கெடுத்துத் தாம் வாழ வழி காணுவதில் முனைந்து நிற்கிறது. இந்தத் தடுமாற்றம் ஒழியவேண்டும்.

இதற்கானதொரு நல்ல வழி, முன்னோர் சென்ற நெறிப்படி யொழுகுவதேயாகும். மேடு பள்ளமின்றி வியத்தகு நிலையில் அமைத்த சாலை; அறிவானான்ற சான்றோர் பலர் விரும்பி நடந்து மேன்மை பெறுவதற்குத் துணை புரிந்த சாலை; கண்ணெதிரே காணப்படுகிறது. அதை விட்டு விட்டு முட்புதர் வழியேதான் நடப்பேனென்று சொல்லுவது அறிவுடைமையாகுமா?

தாங்கள் பெற்ற நல்லின்பம் தரணியும் பெறவேண்டுமென்ற பெருங் கருணைகொண்டவர்கள் நமது முன்னோர்கள். "மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே" என்று மணிவாசகம் வாய்விட்டழைக்கின்றது. "யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்" என்று திருமந்திரம் செப்புகின்றது. "புசிப்பதற்கே சேரவாரும் செகத்தீரே" என்று தாயுமான அடிகள் திருவாக்கு சாற்றுகின்றது.

தவத்தால் முதிர்ந்த தனிப்பெரு ஞானிகளாகிய சான்றோர்கள் நின்ற நெறி, தாவாத இன்பநெறி. அந்த நெறியைக் கடைப்பிடித் தொழுகினாலன்றி இன்பம் பெறுவது எந்நாளும் இல்லை. இவ்வுண்மையை உணர்ந்து பணியாற்றுவது சைவ சித்தாந்த மகாசமாசம். நாவலர் ஏறாகிய ஞானியாரடிகளின் அருட்டலைமையில் தொடங்கப்பெற்ற சமாசம் நாற்பத்தாறாண்டுகளாக நல்ல பணிகளைச் செய்து வருகிறது. மக்கள் பயன்பெறத்தக்க நற்பணிகள் பலவற்றை மேலும் புரிந்து, நாட்டிலே சைவமும் தமிழும் தழைத்தோங்குதற்கான வழிகாட்டியாய்ச் சமாசம் நீடு வாழ்க என வாழ்த்துகிறேன்.

**அன்பர்களே!**

ஆண்டவன் அருவமாக - அருவுருவமாக - உருவமாக இருக்கின்றான். அவனது சிவநெறியும் அத்தன்மை பெற்றதே. சிவநெறிக்கும் தங்களுக்கும் தொடர்பில்லையென்றிருப்பவர்களையும் அது விட்டுப் பிரியாது, அவர்களிடத்தில்

அருவமாக மறைந்திருக்கும். சமய ஒழுக்கத்தில் ஒட்டியும் ஒட்டாதும் வாழுபவர்களிடம். அது தோன்றியும் தோன்றாதும் அருவுருவமாக இருக்கும். உண்மை அன்புசெய்யும் அடியவரிடத்து உறுதியான உருவங்காட்டி விளங்கித் தோன்றும்.

நாம் விட்டாலும் நம்மை விடாதது சிவநெறி. எனவே, மனிதர்கள் இருக்கின்ற இடமெல்லாம் சைவர் மாநாடு நிகழ்கின்ற இடம்தான். இப்படி உலகெங்கும் பரந்திருக்கின்ற சைவர் மாநாட்டை, இன்று இங்கே உருவிளக்கமாகப் பார்க்கிறோம். அதனால்தான், யாரும் திறக்கவேண்டாது வெளிப்பட்டிருக்கின்ற சைவர் மாநாடு இன்று என்னால் திறக்கப்பெற வேண்டுமென்று உங்கள் கட்டளை பிறந்தது என்று கருதுகின்றேன். உங்கள் ஆணையைக் கைக்கொண்டு எனது ஆன்ம நாயகனாகி அறம் வளர்த்த அம்மையாருடனிருந்து அருளுகின்ற ஐயாறப்பன் திருவருளை நினைந்து இம்மகாநாட்டைத் திறந்து வைக்கின்றேன்.

மங்கையொரு பங்கன் வளர்கருணை மாநிலத்திற்
பொங்கிச் சமாசம் பொலிந்திடுக !—நங்களுக்கிங்
கின்பம் பெருக்கி யியல்சேர் சிவநெறியுந்
தென்றமிழும் வாழி சிறந்து.

---

# வரவேற்பிதழ்*

குலவு பூம்பொழிற் குன்றக் குடியினில்
நன்னர் எடுத்த நாற்பா னாறும்
சைவசித் தாந்த மகாசமா சத்தில்
சைவ இளைஞர் தனிமா நாட்டினைத்
தொடங்கிவைத் திடவருந் தூயநல் இளைஞ !
செந்தா மரைவளர் செல்வியின் அருளும்
வெண்டா மரைவளர் வித்தகி யருளும்
ஒருங்கியை யப்பெறும் உத்தம வருக !
செந்தமிழ் நேசம் சிவநெறி வாழ்வு
தெளிந்து வினையாளுந் திறமை கொடைமலி
தியாக ராசன் செய்தவப் புதல்வ !
ஆங்கில மொழிவளம் அருந்தமிழ் மொழிவளம்
வாணிபத் துறைவளம் வளர்புலக் குருசில் !
அந்தமில் புகழ்சேர் சுந்தரத் தோழ !
சைவம் பரப்பித் தண்டமிழ் வளர்த்துப்
பொன்பொருள் போகம் அன்பருள் அறன்பெற்
றாயுள் நலமும் அமைந்துவா ழியரென
அருணையா தீனத் தருட்பெருங் குருமணி
தெய்வ சிகாமணி திருவருட் பெருக்கினில்
மன்னுக நலமென வாழ்த்துது மினிதே.

வரவேற்புக் கழகத்தார்

*இது குன்றக்குடியில் (23-12-51) நடைபெற்ற 46-வது சைவ இளைஞர் மகாநாட்டைத் தொடங்கிவைத்த திரு. தி. சுந்தரம் B. Com. அவர்கட்கு மனமுவந்து வழங்கப்பட்டது.



---

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 46-வது ஆண்டு நிறைவு விழா
குன்றக்குடி சைவ இளைஞர் மாநாட்டில் (23-12-51)
தி. சுந்தரம் பி. காம்., அவர்கள்
நிகழ்த்திய

# தொடக்கவுரை

முன்னுரை : சித்தாந்தச் செந்நெறிச் செல்வர்களே ! பருமக்களே ! உளம் நிறைந்த வணக்கம். பல ஆண்டுக ாக, சிவநெறித்தொண்டைத் திறம்பட நடாத்திவருகின்ற சவ சித்தாந்த மகா சமாஜத்தின் இந்த ஆண்டு இளைஞர் ாநாட்டைத் தொடங்கி வைக்கின்ற பேறு கிடைத்தமை றித்துப் பெரிதும் மகிழ்கின்றேன்.

வண்ணப் பணித்து வாவென்று கருணை காட்டிய டிகளாரது அடியிணைகளுக்கு நெஞ்சநந் தோய்ந்த வணக் த்தைச் செலுத்திப் பணியின்மேற் செல்கின்றேன்.

வாழ்க்கையும் சமயமும் : மக்கள் வாழ்க்கை மிக யர்ந்தது ; பிறப்பின் பெரும் பயனாகிய திருவருட் பேற்றை ய்த அருந்துணையாக இருப்பது. அத்தகு உயர்நிலை வாழ்க் கையைப் பெற்ற நாம் இளமையிலேயே இறையின்ப வேட் கயிலே நாட்டங்கொள்ளவேண்டும். வாழ்க்கை நிலையற்

றது. "நெருநலுளனொருவன் இன்றில்லை" என்ற பெருமையைத் தானே சூட்டுகின்றார் திருவள்ளுவர். "மன்னா உலகம்" என்று புறநானூறு பேசுகின்றது. "நில்லாமையே நிலையிற்றாகலின்" என்று குறுந்தொகை கூறுகின்றது. மக்களை, "ஒருநாள் வாழ் உயிர்கள்" என்று பிண்டார் கூறுகின்றார். "வாழ்வு குறுகியது" என்பது ஹொரேசின் என்பவரின் அறிவுரை. இத்தகு நிலையற்ற வாழ்க்கையை நிலையுடையதாக்குவது சமயம். மன உணர்ச்சிமிக்க வாழ்க்கையைத் தருவது சமயம். வாழ்க்கையை வளம்படுத்துவதும் இருமையும் இன்பம் பயப்பதும் சமயமேயாம். சமயச் சார்பற்ற வாழ்க்கை சாவியாய வாழ்க்கையேயாம். "பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று திருமுறை பேசுகின்றது. வாழ்க்கையில் தளர்ச்சி தலைகாட்டுகின்றபொழுது, உணர்ச்சியூட்டி இன்பந் தருவது சமய வாழ்க்கையும் கடவுட்டொண்டுமேயாம்.

மக்களுக்குக் கடவுட் சார்பே வலியுடைய நிரந்தரமான சார்பாகும். அஃதன்றி வேறு எந்தச் சார்பும் பயனுடையதல்ல. முடிமன்னர்களது சார்புங்கூட அப்படித்தான்! கடவுட்டொண்டில் கருத்துச்செலுத்தாது, காவலன் நலங் கருதி மதிப்பிற்குரிய செயல் செய்த தாமஸ் உல்சியின் பின்னாள் நிகழ்ச்சியைச் சிந்தித்துப் பாருங்கள்! அப்பொழுது அவர் உளமுடைந்த நிலையில் கூறியன நம்மனோருக்கு அறிவுரையாக இருக்கட்டும். "காவலனுக்குச் செய்த தொண்டில் ஒரு சிறிதளவாவது கடவுளுக்குச் செய்திருப்பேனானால் நான் இந்த திக்கற்ற நிலைக்கு வந்திருக்கமாட்டேன்" என்று உணர்ந்து உரைக்கின்றார்.

Had I but served my God with half the Zeal I served the King, He would not in mine age, have left me naked to mine enemies.

என்பது அன்னாரின் உரை. இத்தகு ஆன்றோரின் அன்பு நலஞ் செறிந்த கருத்துகள் நமக்குச் சமய வாழ்க்கையின் பயனையும் பெருமையையும்புலப்படுத்தி அமைகின்றன.

**தமிழகமும் சமயமும் :** தமிழகம் தெய்வ மணங் கமழும் திருநாடு ; இறைமணம் கமழும் இன்பத் திருநாடு.



நமது முன்னோர்களது வாழ்க்கை சமயத்திலேயே தோய்ந்திருந்தது. அவர்களது சிந்தனை, செயல், செல்வம் எல்லாம் சமயத்துறையிலேயே ஈடுபட்டுச் செயற்பட்டிருந்தன. விண்ணினை அளந்து காட்டும் நூற்றுக்கணக்கான ஆலயங்கள் இந்த நாட்டில் அமைந்திருப்பதே அவர்கள் கடவுள் பற்றிற்கு எடுத்துக்காட்டாக அமைவன. அருளோடன்றிப் பொருளும்படைத்த பல ஞான மடாலயங்கள் விளங்குவது அவர்கள் சமய உணர்ச்சிக்குச் சான்று பகர்வன.

தமிழகத்தின் சமயம் தமிழகத்திலே பயின்றன – வளர்ந்தன – நிலவின – நிலவுகின்றன. தமிழ் மக்கள் என்றும் சமயவெறி கொண்டு வாழ்ந்ததில்லை. பிற சமயத்தைக் கண்டு காய்கின்ற உணர்ச்சி இந்த நாட்டிலே இருந்ததே இல்லை. இருக்கப்போவதும் இல்லை. செஞ்சொற்காப்பியமாகிய சிலப்பதிகாரத்திலே பல்வேறு சமய நிலையங்களும் இருந்ததைக் காண்கின்றோம். ஒரே குடும்பத்தின் சகோதரர்கள் இருவர் வெவ்வேறு சமயத்தைக் கொண்டொழுகியதையும் அறிகின்றோம். தமிழ்மக்கள் எல்லாச் சமயங்களையும் ஒப்பநோக்கி உறவு கொண்டாடி மகிழ்ந்தாலும் சைவத்திற்குத் தமது உள்ளத்திலே உயர்ந்த இடத்தைக் கொடுத்தே வந்தனர். அதனாலன்றோ, சைவம் பழமைக்கெல்லாம் பழமையாகக் காட்சி அளிக்கின்றது. அதோடு புதுமைக்கெல்லாம் புதுமையாகக் காட்சி தருகின்றது. சங்க இலக்கியங்கள் எல்லாம் சைவத்தின் சீர்மையையும் பெருமையையும் பேசுகின்றன. தமிழகத்தின் தனியுயர் நெறியாகச் சைவத் திருநெறி விளங்கியது ; விளங்குகின்றது ; இனி எதிர்காலத்திலும் விளங்கும்.

சைவ வாழ்க்கை : சைவத் திருநெறி அன்புநெறி. அனைத்துலகையும் அன்பிலே காண்பது சைவம். சைவவாழ்க்கையே அன்பு வாழ்க்கை, அன்புவாழ்க்கையே சைவ வர்ழ்க்கை. சைவத்திலே இறைவழிபாடு மக்கள் வழிபாடு, இரண்டும் வலியுறுத்தப் பெறுகின்றன. சைவத்தின் வழிபாட்டுமுறை எளிமையும் அமைதியும் அமையப் பெற்றதாகும். "யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை" என்று எளிமையை எடுத்துரைப்பர் திருமூலர். நாளடைவில் மக்களது ஆர்வப் பெருக்கினால் "எல்லாம் அவனுடைமையே" என்ற எண்ணத்தின் பயனால் இறை வழிபாட்டில் பொன்னும்

மணியும் துகிலும் கலந்தன. ஆனால் வழிபாடு, பொருளின் தரத்தைப் பற்றி நிற்கவில்லை. வழிபடுகின்றவரின் உள்ளன்பைப் பற்றியே நிற்கிறது. சாதாரண எருக்கம்பூதான்! அதை நல்ல பூக்களின் வரிசையிலும் வைத்தெண்ணுவதில்லை; தீய பூக்களின் வரிசையிலும் வைத் தெண்ணுவதில்லை. அவ்வளவு தரத்தில் தாழ்ந்தது எனினும் நிறைந்த அன்புள்ளத்தோடு ஒருவன் அந்த மலரை இடுவானாகில் கடவுள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கின்றார் என்று பழந்தமிழ் நூல் புறநானூறு பேசுகின்றது.

> நல்லவுந் தீயவும் அல்ல குவியிணர்ப்
> புல்லிலை எருக்க மாயினு முடையவை
> கடவு பேணே மென்னா.

அன்பற்ற உள்ளத்துடன் செய்யப்படுபவைகளைக் கண்டு இறைவன் நகைக்கின்றார்.

> நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
> புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
> பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
> நக்கு நிற்ப னவர்தமை நாணியே.

என்பது அப்பரடிகளின் அருண்மொழி.

இறை வழிபாட்டைப் போலவே மக்கள் நலத் தொண்டிலும் சைவம் கருத்துச் செலுத்தியுள்ளது.

இன்று தலைவர்களாக விளங்குகின்றவர்களும், தலைவர்கள் ஆக ஆசைப்படுகின்றவர்களும் "மக்கள் நலமே எங்கள் இலக்ஷியம், மக்கட் தொண்டே கடவுட் டொண்டு, மக்களை மக்களாக மதித்து நடத்துவதே நனி சிறந்த நாகரீகம்" என்றெல்லாம் வாய்ப்பறை சாற்றுகின்றனர். ஆனால் உண்மைச் சைவர்கள் அன்றே, "மக்கட் டொண்டே மகேசுவரன் தொண்டு" என்று கருதிக் கனிந்த உள்ளத்துடன் செய்து வந்தனர். சைவம் மக்களைக் கடவுளாகவே மதித்து அன்பு செய்யச் சொல்லுகிறது; ஒருவனது புறவொழுக்கத்தையே குறிக்கோளாகக் கொண்டு, "அன்பு செய்" என்று ஆணையிடுகின்றது. அவன் புறக்கோலத்துக் கேற்ற உள்ளத் தூய்மையுடையவனா, ஒழுக்கமுடையவனா என்றெல்லாம் ஆய்வது புறம்பான உணர்ச்சியாகும். இந்த ஆய்வுணர்ச்சிக்கு அடிப்படை, சந்தேகங் குடிகொண்ட



தீய வுள்ளந்தானே! சந்தேகம் தங்குகின்ற நெஞ்சு, தவறான நெஞ்சு.

Suspicion always haunts the guilty mind என்பர் ஷேக்ஸ்பியர்.

" சந்தேகமற்ற உள்ளத்துடன் சிவ வேடந் தரித்தவர்களைச் சிவனெனவே கருதி வழிபடுக" என்பது சைவத்தின் உயர்ந்த கொள்கை. இது வேறு எந்த சமயத்திலும் அல்லாத தெய்வீகக் கொள்கை. இத்தகு நலங்கள் மல்கிய சைவத்தைச் சார்ந்து வாழ்தல் நமது தவப்பேறேயாகும்.

பக்தி நிறைந்த வாழ்க்கை : உயிர்களுக்கு நல்ல குணங்கள் இரண்டுள. இவ்விரண்டும் இயைந்திருத்தல் வேண்டும். அவையே பயம், பக்தி என்பன. பயம் மட்டும் இருப்பின் அவனை அறிவுக்குறைவு உள்ளவன் என்றே கொள்ள வேண்டும். "அச்சமே கீழ்களது ஆசாரம்" என்றார் வள்ளுவர். பயத்துடன் பக்தி சேர்ந்திருப்பதே மக்களுணர்ச்சிக்கு மாண்பு தருவதாகும். இறைவன் பக்தி வலையிற் படுபவன். பக்தி நிறைந்த வாழ்க்கையால் எல்லா வகையான இன்பங்களையும் பெற முடியும். தேசீயக் கவிஞர் பாரதியார் பக்தியைப்பற்றி, பக்தியால் அடையும் நன்மைகளைப்பற்றி யெல்லாம் விளக்கமாகப் பாடியுள்ளார்.

> பக்தியினாலே — இந்தப்
> பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடி
> சித்தம் தெளியும்—இங்கு
> செய்கை அனைத்திலும் செம்மை பிறந்திடும்
> வித்தைகள் சேரும்—நல்ல
> வீர ருறவு கிடைக்கும் மனத்திடை
> தத்துவ முண்டாம்—நெஞ்சிற்
> சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்

என்றும் பக்தியினால் வரக்கூடிய மேன்மைகளை எடுத்துரைக்கின்றார். நாம் அன்பு நிறைந்த பக்தியுடன் வாழ்ந்து வளம்பெற்று இன்புறுவோமாக.

நமது கடமை : சைவம் தொன்மையான பெருநெறி, அருள்நலங் கொழிக்கின்ற தவநெறி, தமிழகத்தின் தனி நெறி. இந்த நெறி சென்ற காலத்தைப் போலவே உலகப்

பொது நெறியாக இலங்க இளைஞர்கள் தொண்டாற்ற வேண்டும். அவர்களது அறிவுத் திறனும், ஆற்றலும் சைவத்தின் ஆக்கத்திற்கே பயன்பெற வேண்டும். சமய உணர்ச்சிக்கு மாறுபட்ட நச்சுக் கருத்துக்கள் இந்த நாட்டிலே உலவாதவண்ணம் அழிக்கப்பெறவேண்டும். சமய வாழ்க்கையின் பெருமையையும், பயனையும் சமய நூல்களின் நுணுகிய கருத்துக்களையும் இந்த நாட்டின் மூலைமுடுக்குகளெல்லாம் பரப்புதல் வேண்டும்.

இளைஞர்களே! பெரியோர்களே! ஒருமனப்பட்டு எழுங்கள்! சைவமுந்தமிழும் தழைத்தினிதோங்குக! என்று முழக்கஞ் செய்யுங்கள்.

தொகுப்புரை: அன்பர்களே! இது வரையில் உங்களது சிந்தனையின் நினைவுக்குக் கொண்டுவந்த செய்திகளாவன: வாழ்க்கை நிலையற்றது. நிலையற்ற வாழ்க்கையைக் கொண்டு நிலைபேறுடைய இன்பப் பெருநிலையை அடைய முயலுதல் வேண்டும். அந்த முயற்சிக்கு அடிப்படை சமய வாழ்க்கையேயாம். கடவுட் சார்பே மக்களுக்குரிய நிலைபெற்ற இன்பந் தரத்தக்க சார்பு. அந்தச் சார்பினைப்பெற இளமை தொட்டே எண்ணங்கொண்டு முயலுதல் வேண்டும். தமிழ்மக்களது வாழ்க்கையிலே சமய உணர்ச்சி கலந்து படிந்திருக்கிறது. தமிழகத்திலே—தமிழ்மக்களிடத்திலே என்றும் சமய வெறி இருந்ததில்லை. அவர்கள் எல்லாச் சமயங்களையும் ஒப்பவே கருதிக் கொண்டாடினார்கள். எனினுஞ் சைவத்தை உயிர்நிலையாகக் கருதிக் காத்து வளர்த்தனர், தமிழகத்தின் சமயமாக விளங்கியதும் - விளங்குவதும் சைவத் திருநெறியேயாம்.

டாக்டர் ஜி. யு. போப் ஐயர் "சைவ சித்தாந்தத் திருநெறி, தமிழரது பேரறிவின் பயன்" என்று கூறியுள்ளார். சைவத்தின் வழிபாட்டு முறைகள் எளிமையும் அமைதியும் நிரம்பியன. சைவத்திலே இறை வழிபாடோடன்றி, மக்கட்டொண்டும் வலியுறுத்தப் பெற்றுள்ளன. கடவுட்டொண்டினும் மக்கட்டொண்டு உயர்ந்தது - பயன் தரத்தக்கது என்பது சைவத்தின் கொள்கை. இக்கொள்கை தானே சிவனடியார் வழிபாடு. இந்நெறி நின்ற பெருமக்கள்தானே அறுபான்மும்மை நாயன்மார்களிற் பலர்! மக்கள் வாழ்க்கை வளமுற, இன்ப நலம் கொழிக்கப் பக்தி



உணர்ச்சி வேண்டும். அன்பு நிறைந்த பக்தி வாழ்க்கை வாழவேண்டும். சைவத்தின் வளர்ச்சிக்காகச் சீரிய முறையில் தொண்டாற்ற வேண்டும். நமது சிந்தனையும் செயலும் சைவத்தின் ஆக்கத்தைப் பற்றியே இருக்கவேண்டும் என்பதாகும்.

முடிவுரை: வருங்கால சைவவுலகின் தலைவர்களாகிய உங்கள்முன் இதுவரையில் எனது கருத்துக்களைச் சொன்னேன். தற்காலத்தில் சமயத்தின் நிலையும் சிறப்பாகச் சைவத்தின் நிலையும் தாங்கள் அறிந்தவையேயாம். கால நிலையினை உணர்ந்து அதற்கேற்ப விரைந்து பணிகளில் ஈடுபடவேண்டுமென்பதே எனது வேண்டுகோள்.

தமிழ் நாட்டு இளைஞர் ஒருவர் ஏழாம் நூற்றாண்டிலே ஆலவாயண்ணலின் திருமுன்பு ஒரு விண்ணப்பத்தை விண்ணப்பித்துக்கொண்டார். அந்த இளைஞர் தாம் ஞானசம்பந்தர். அந்தப் பரம்பரையிலே வந்த நாமும், அந்தச் சைவ இளஞாயிற்றின் விண்ணப்பத்தையே விண்ணப்பித்து வேண்டி நிற்போமாக.

"ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்
தென்ஆல வாயி லுறையும்எம் ஆதியே"

---

# வரவேற்பிதழ்*

உயிருல கிறையென வுரைத்திடு மொன்றின்
உண்மையை யுணர்த்து மொளிநெறிச் சமயஞ்
சைவசித் தாந்த சமயமென் றுன்றோர்
கண்டுரைத் தனரவர் காட்சியின் பயனாய்ப்
பற்பல நூல்கள் பொற்புற எழுந்தன
சாத்திரம் தோத்திரம் சரித்திர மென்ற

---

*இது குன்றக்குடியில் (23-12-52) நடைபெற்ற 46-வது சைவ இளைஞர் மகாநாட்டில் தலைமை தாங்கும் திருவண்ணாமலை ஆதீன வித்துவான் - பண்டித - மு. முத்து வேங்கடாசலமையரவர்களுக்கு மனமுவந்து நல்கப்பட்டது.

பகுப்பினில் விளங்கும் பண்டையோர் வாய்மொழி
வையகம் வாழும் வழியினை வகுத்து
மறுமையி லின்புறு மாட்சியைத் தெரித்து
நல்லுப காரம் நமக்களிப் பதனை
விளக்கிப் பணிபுரி மேதகு சைவ
சித்தாந்த சமாசந் திகழ்விழா இளைஞர்
மாநா டிலங்க வருபெருந் தலைவ !
வடமொழி தென்மொழி திடமுறப் பயின்று
இசையுறும் விரிவுரை யியற்றிய சீலன்
வித்தக மறையோன் முத்துரா மப்பெயர்ச்
செம்மல் தரவரு சீரியோய் கோநகர்க்
கற்பக விநாயக கலாஅ சாலையில்
தக்கசீர் மதுரைத் தமிழ்ச்சங் கத்தில்
பைந்தமிழ் பயின்ற பண்டித! ஆரியம்
ஆங்கிலம் அறிந்து இங்கரும் பென்னப்
பாடல்கள் யாத்தும் நாடிய விரிவுரை
செய்தும் கட்டுரை சிறப்புற எழுதியும்
சைவம் வளர்க்கும் தனிப்பெரும் புலவ !
வீறுசேர் முத்து வேங்கடா சலப்பேர்
சேருநா வலவ திருவண் ணாமலை
ஆதீன வித்துவா னாகிய பாவல !
சைவக் கொழுந்தாய்த் தழைத்தருள் செய்யும்
குன்றக் குடிப்பிரான் குளிரருள் பெற்றுத்
தெய்வ சிகாமணி தேசிக ரருளுடன்
சைவமும் தமிழுந் தழைத்தினி தோங்கப்
பணிபல புரிந்து பாரினில் நலமுடன்
வாழ்கநீ யென்று வாழ்த்துதும் யாமே.

---

கொழும்பு உறுப்பினர்களுக்கு வி. பி. பி.யில் அனுப்புவதில் சில அஞ்சல் அலுவலகத் தொல்லைகளும், சங்கடங்களும் இருப்பதால் நேரத்தில் அனுப்ப இயலாமைக்கு வருந்துகிறோம். இவ்வளவு தொல்லைகளுக்கும் பொருட்செலவுக்கும் இடையில் அனுப்பும் வி. பி. பியைத் திருப்பி அனுப்பாது பணம் கட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

செயலாளர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜம்

**46-வது ஆண்டு நிறைவு விழா, குன்றக்குடி.**

**சைவ இளைஞர் மகாநாட்டுத்**

# தலைமையுரை

(திருவண்ணாமலை யாதீன வித்வான்,
பண்டித, மு. முத்து வேங்கடாசலமய்யர்)

வைய நீடுக! மாமழை மன்னுக !
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக !
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக !
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

மன்னுபுகழ்த் தமிழன்னை மணிவயிற்றில் உடனுதித்த
செல்விகளே ! செல்வர்களே !

உங்கள் பொன்னார் திருவடிகட்கு என் மனங்கலந்த வணக்கத்தைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜத்தார் 1944-ஆம் ஆண்டில் பள்ளத்தூரில் நடந்த விழாவிற் சொற்பொழிவு நிகழ்த்தும் பேற்றை எளியேனுக்கு அளித்தருளினர் ; இவ்வாண்டிற் சைவ இளைஞர் மாநாட்டின் தலைமைப் பேற்றையும் எளியேற்கு மனமுவந்து வழங்கியுள்ளனர். இவ்வாறு

பணி கொண்டு என்னை ஆளாக்கிய சமாஜத்தார்க்கும் வரவேற்புக் கழகத்தார்க்கும் என் நன்றியறிவையும், வணக்கத்தையும் உரிமைப் படுத்துகின்றேன் : பெரியோர் சிலையில் தெய்வபாவனையை இடைவிடாது நிகழ்த்த, அத்தெய்வம் அவ்வுருவில் தங்கிப் பெரும் பயன் விளைத்தல் போன்று அறிவு அருளாற்றல் நிறைந்த உங்கள் தூய எண்ணங்களெல்லாம் ஒருங்கியைந்து சிறியேனுக்குத் தலைமைத் தகுதியளிக்கும் என்னுந் துணிவு பூண்டு இப்பணியில் தலைப்படலானேன் ; இதிற் காணப்பெறுங் குறைகளைப் பொறுத்தருள வேண்டுகின்றேன்.

கோலமாமயிலின்மீது குலவிய குமரவேளின் பேரருட் பெருக்கிலே—குரு தெய்வசிகாமணிப் பெருந்தகையின் ஞான வாரமுதப் பெருக்கிலே திளைக்கின்ற நாம், இக்குன்றக் குடித்தலத்தில் நிகழும் சமாஜ விழாக் கண்டு களிக்கக் குழுமியிருக்கின்றோம். ஈண்டுச் சமாஜ விழா நிகழ்தல் மிக மிகப் பொருத்தமானதாகும். திருப்பெருந்திரு தெய்வ சிகாமணி ஆறுமுக அருணாசல ஞான தேசிக பரமாசாரிய சுவாமிகளின் திருவருளை வந்தித்து வாழ்த்துகின்றேன் இவ்விழாவிற் பங்குகொள்ளும் பெரியோரனைவரும் பெரிதும் பாராட்டற்குரியர் ஆவர்.

## சைவத்தின் தொன்மை

நம் சைவசமயம் மிக மிகத் தொன்மை வாய்ந்தது. உலகப் பெருஞ் சமயங்களாகக் கருதப்படும் கிறித்தவம், இஸ்லாம், பௌத்தம் முதலாயின தோன்றற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம் சைவசமயம் மிகச் சிறப்பாக உலகெங்கும் பரவியிருந்தது. எகிப்து, மெசொபொடோமியா, அரேபியா, கிரீஸ், இதாலி, இங்கிலாந்து, தென் அமெரிக்கா முதலிய பல இடங்களிலும் இன்றைக்கும் சிவலிங்கங்கள் பல காணப்பெறுகின்றன. இலங்கையில் திருக்கேதீச்சரம் உள்ள மாந்தை நகரில் சிவலிங்கங்களும், சங்காபிடேகத்திற்குரிய 1008 சங்குகளும் அகழ்ந்தெடுக்கப்பெற்ற செய்தி ‘சித்தாந்தம்’ கர ஆடி இதழில் வெளியாகியுள்ளது. பாரத நாட்டின் புறம்பே பல சிவ சின்னங்கள் காணப்படுதல் போன்று, பாரத நாட்டிலும் சேது முதல் இமயம் வரை யாண்டும் காணப்படுகின்றன. சிவலிங்கம், கூத்தப்பெருமான், நந்தி முதலிய திருவுருவங்கள் சிந்துக் கரையில் அகழ்ந்தெடுக்கப் பெற்றதை யாவரும் அறிவர். இமயம் முதற் கன்னிமுனைவரை சிவாலயங்களும் சைவநெறியும் தழைத்தோங்கியுள்ளன. இவற்றை மனத்துட் கொண்டு நோக்கின்,



“ ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே ”

என்ற ஆளுடைய கன்றின் அருண் மொழியும்,

“ நிலவுந்திரு நீற்று நெறித்துறை நீடுவாழ
உலகெங்கும் நிரம்பிய சைவம் உயர்ந்துமன்ன ”

என்ற சேக்கிழார் பெருமான் அருண்மொழியும் முற்றிலும் உண்மை மொழிகளே யென்பது நன்கு புலனாகும்.

## சைவத்தின் மாண்பு

சிவபிரான் ஆணையால் ஆன்மாக்கள் வினைவழியாகப் பிறந்திறந்துழலுங் காலத்து, பௌத்தம் முதலிய புறச் சமயங்களில் நின்று, அவ்வச் சமய நூல்களில் விதித்த வண்ணம் ஒழுகுவரேனும், அவரவர்க்கு அவரவர் வணங்கும் உருவினராய்ச் சிவனே அருள் செய்கின்றார். இதனை,

“ அறிவி னுல்மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து
எறியும் மாகடல் இலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்

குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே ''

என்னும் ஆளுடைய நம்பிகள் தேவாரத்தாலும்,

'' யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம்
வருவர் மற்றத்தெய் வங்கள்
வேத னைப்படும் இறக்கும்
பிறக்கும்மேல் வினையும் செய்யும்
ஆதலான் இவையி லாதான்
அறிந்தருள் செய்வ னன்றே ''

என்னுஞ் சிவஞான சித்தித் திருவிருத்தத்தாலும் அறியலாகும்.

புறச்சமயங்களில் நின்று இயற்றிய நல்வினைகளால் பின் வைதிக நெறியிற் புகுந்தோர் வேதத்திலும் அதன் வழி நூல்களிலும் விதித்த பசு புண்ணியங்களைச் செய்து சுவர்க்கஞ் சென்று போகம் நுகர்ந்து மீண்டும் பூமியிற் பிறப்பர் ; முன்செய்த அந்நல்வினை மிகுதியால் சைவாகமத்தால் உணர்த்தப் பெறுஞ் சைவத்திற் புகுந்து, சரியை, கிரியை, யோக நெறி நின்று, அவற்றின் பயன்களாகிய சாலோக, சாமீப, சாரூப பதங்களைப் பெறுவர் ; அவர்களுள் போகத்தில் பற்று இல்லாதவர் மீண்டும் பூமியில் வாராது சிவனருளால் பரமுத்தி யடைவர் ; பற்று உடையவர் மீண்டும் பூமியிற் பிறந்து சிவஞானத்தைப் பொருந்திப் பரமுத்தியாகிய சிவசாயுச்சியத்தைப் பெறுவர். இவ்வுண்மையைச் சைவ சமய சாத்திரமாகிய சிவஞான சித்தியார் நன்கு அறிவுறுத்துகிறது. அச்செய்யுள் வருமாறு :—



'' தானம்யா கம்தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள்
சாந்திவிர தம்கன்ம யோகங்கள் சரித்தோர்
ஈனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வர்
ஈசனியோ கக்கிரியா சரியையினில் நின்றோர்
ஊனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லாம்
ஒடுங்கும்போ தரன்முன்னிலா தொழியின் உற்பவித்து
ஞானநெறி அடைந்தடைவர் சிவனை யங்கு
நாதனே முன்னிற்கின் நணுகுவர் நற்றாளே ''

இவற்றால் சைவ சித்தாந்தத்தன்றிப் பரமுத்தி சித்தியாது என்பதும், அப் பரமுத்திக்குச் சாதனம் சிவஞானமே என்பதும், அச்சிவஞானத்தைப் பயப்பன சரியை முதலிய மூன்றுமே என்பதும் விசதமாக விளங்கும்.

ஏனைய சமயங்கள் ஆன்ம தத்துவம் 24-உள் அடங்கி அத்தத்துவப் பொருளையே பரம்பொருள் எனக் கொள்ளுதலால் அவை இதனுள் வியாப்பியமாக, இது வியாபகமாய் அவற்றைக் கடந்து நிற்றலின் இதுவே 'அதீத சமயம்' என்றும் இந்நெறி நின்று பெறும் பொருளே 'பழம் பொருள்' என்றும் கூறப்பெறும். இதுபற்றியே எவரும் போற்றும் தாயுமானசுவாமிகளும்,

'' சைவ சமய மேசமயஞ்
சமயா தீதப்பழம் பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி
காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி
புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாருஞ் செகத்தீரே ''

என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

சமரச நிலையை வற்புறுத்திக்கூறுதல் நம் சமயத்தின் தனிப்பெரு மாண்பாம். சமயக்குரவர்கள் அருளிச் செய்

துள்ள தமிழ் வேதங்களை ஓதுவோர்க்குச் சமரசவுண்மை நன்கு புலனாகும்.

> " விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்து
> எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும் "

> " ...ஆறுசமயத் தவரவரைத், தேற்றுந் தலையன "

என்னும் அப்பர் அருண் மொழிகளை நோக்குக.

முதலும் முடிவுமின்றி அநாதியாக உள்ள உயிர்க்கு நல்வினை தீவினைகளால் உடல், கருவிகள், உலக இருப்பு, இன்ப துன்ப நுகர்ச்சி ஆகிய இவைகள் வந்தெய்துகின்றன. உயிர்கள் இவ்வுலகில் வாழும் வாழ்க்கையைக் கொண்டே பாசநீக்கமும் பாசப்பற்று நீக்கமும் திருவருட்பேறும் பெற்றுப் பேரின்ப நிலையில் இருத்தல் இயலும் என்று கனிந்து கூறும் இத்திருநெறி ஒன்றே நமக்கு மிகுதியாய் ஆறுதல் அளித்து நிற்பதாகும்.

அன்பு, அருள், அறம், அறிவு, தூய்மை, தொண்டு, பிறர்நலம் பேணல் முதலிய உயிர்க் குணங்களை நாள் தோறும் வளர்த்து வருவோமாயின், இவையே நம்மைச் சமய வாழ்க்கையிற் புகுத்தி ' அறவோர் ' ஆக்கும் ; இத் தகைய தெய்வப் பண்புகள் நிறைந்து இயற்கையுடன் ஒன்றிச் சமய வாழ்க்கையில் வாழ்ந்து நமக்கு வழிகாட்டிகளாய்ச் சிறந்த சைவப் பெரியார்களே அறுபான்மும்மை நாயன்மார்கள் ஆவர். இவர்கள்பாற் சுடர்விட்டு நின்ற குணவிசேடங்களைச் சேக்கிழா ரடிகள் தம் அன்பு நூலில் விரித்து விளக்கி யருளுகின்றார்.

## அன்புநெறி

நூலறிவும் அனுபவ அறிவும் சிவ நலம் பெறுதற்குரிய எனினும், நம்மனோர் உய்ய நம் பெரியோர் அனைவரும் மேற்கொண்ட கனிந்த நெறி ' அன்பு நெறி'யே.



இனியவரிடத்துக் கொள்ளும் காதலே ' அன்பு ' எனப் படும். இனியான்,

> " எனக்கினி யவன்தமர்க் கினியவ
> னெழுமையும் மனக்கினி யவன் "

> " என்னிலும்மினி யாமொரு வன்னுளன்
> என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
> கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே "

என்ற அருளுரைகளின்படி இறைவனே யாவன் ; இறைவன்பால் அன்பு மீதூரப் பெற்றவர் சிவமெனுஞ் செம் பொருளை நினைத்தல், கேட்டல், காண்டல் செய்தபொழுதே, தன்வசம் அழிவர் ; மயிர்க்கால் தோறும் திவலையுண்டாகப் புளகங் கொள்வர் ; சிந்தை நைந்துருகிப் பாய்வது போன்று கண்கள் அன்புநீர் பொழிய நிற்பர் ; நாத் தழுதழுத்து உரை தடுமாறுவர் ; இறைவன் உவப்பனவே செய்வர் ; வெறுப்பன ஒழிவர்.

இத்தகைய அன்பு இல்லாதபோது சிவனை யடைதல் ஒருவாற்றானும் இயலாது.

> " அன்பேயென் னன்பேயென் றன்பாலழைத் தழைத்திட்
> டன்பே யன்பாக அறிவழியு — மன்பன்றித்
> தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமது
> சாத்தும் பழமன்றே தான் " (திருக்களிற்றுப்படியார்)

என்னும் அன்புமொழியே இதற்குச் சான்றாம்.

இடையறாது முறுகி வளரும் அன்பின் முதிர்ச்சியில் சிவம் விளங்கும்.

> " அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
> அன்பினில் விளைந்த ஆரமுதே "

> " ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
> ஆரேனுங் காணா அரன் "

என்னும் ஞானநூல் மொழிகள் இக்கருத்தைப் புலப் படுத்துவனவாம். ' அன்பும் சிவமும் அபேதமாய் நிற்கும் ' என்ற கருத்தை,

" அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே "

என்னும் திருமூலர் திருமொழியால் உணரலாம்.

நம் சமயம் அன்புநெறியை அறிவுறுத்தலால் இந்நெறி யொழுகுவோர், சாதிபேதம் முதலியன பாராட்டாது எவ் வுயிரிடத்தும் அன்பு செலுத்தல்வேண்டும்.

" எவ்வுயிரும் பராபரன்சந் நிதிய தாகும்
இலங்கும் உயிர்உடலனைத்தும் ஈசன் கோயில் "

என்ற கொள்கையில் தலை சிறந்து விளங்கும் மக்கள் எந் நாட்டவராயினும் எக்குலத்தவராயினும் சைவரே ஆவர்.

## திருவருள் வாழ்க்கை

இத்தகைய சீர்மைசால் அன்பு தமிழர் வாழ்க்கையிலே வேரூன்றி நிற்பது. மக்கள் இல்லறத்தில் நின்று கருமமும் உள்படாப் போகமுந் துவ்வாத் தருமமும் தக்கார்க்குச் செய்தலில் வழுவா தொழுகுவரேல், அவர் வாழ்க்கை சமய வாழ்க்கையாகவே மலர்கின்றது.

" பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசின் நல்லன தொடையிற் சேர்த்தியும்
ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்து
மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந் தோங்கி
இவ்வகை இருந்தோ மாயினும் அவ்வகை
மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம் முதல்வ !"

என்கின்றார் பட்டினத்தடிகள். இதனால், சிந்தையைச் சிவன்பாற் செலுத்தி, ஐந்தெழுத்தோதலை மறவாது



இல்லற வாழ்க்கையில் இன்பங்காணில், இல்லறமே முத்தி யளிக்கும் ஏற்றமுடையது என்பது தேற்றம்.

உறவினர்க்கும் எளியவர்க்கும் உதவி செய்தற் பொருட்டே இறைவர் தம்மைக் கருவியாக வைத்துப் பொருள் வழங்குகிறார் என்ற உண்மையை மறத்தல் ஆகாது. இன்பத்தில் மகிழும்போதும், துன்பத்தில் மயங் கும்போதும், தம் வினைகளுக்கேற்ப ஆண்டவன் கருணை யுடன் அளித்தவை இவை என நினைக்கும் உறுதிப்பாடு வருதல்வேண்டும் ; எச்செயலிலும் கடவுள் நமக்களிக்குங் கருணையைக் காணலே சமய வாழ்வாகும் ; இப்படிப்பட்ட வாழ்க்கையில் வாழ்தலே ' திருவருள் நெறி ' எனப்படுவது.

சம்பந்தப்பெருமான் சமணர்களை வாதில் வெல்லப் பாண்டியன் அரண்மனைக்குச் செல்லுமுன்னர், தொண்டர் குழாத்துடன் ஆலவாயண்ணல் கோயில் சென்று அடி பணிந்து,

" நோக்கிட விதியிலாரை நோக்கியான் வாதுசெய்யத்
தீக்கனல் மேனியானே ! திருவுளமே "

என்று வினவுவாராய்

" ஓதி யோத்தறி யாஅம ணாதரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
ஆதி யேதிரு ஆலவா யண்ணலே
நீதி யாக நினைந்தருள் செய்திடே "

என்று ' காட்டுமாவுரி'ப் பதிகம் பாடியருளி இறைவன் திரு வருட் குறிப்புணர்வாராயினர்.

" நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய் "

என்ற அப்பர் அருளுரையின்படி ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அவன் காட்டுங் கருணையையே காணுதல் வேண்டும் ; நாம் செய்யும் செயல்கள் எல்லாம் உண்மையில் அவன் நம்மைக் கொண்டு செய்விப்பவை என்ற உணர்வுதித்தல் வேண்டும்.

இவ்வாறு திருவருட் குறிப்பின்வழி யொழுகும் வாழ்க்கையில் "எற்றைக்கும் திருவருளுடையேம்", "இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை" என்று கூறும் உளநிறைவு நிலை பெறுகின்றது.

## சமயநெறி வாழ்வார் குணஞ் செயல்கள்

தன்முனைப்பின்றித் தாழ்வெனுந் தன்மை பூண்டு தம்மைத் திருத்திப் பணிகொள்ளும் சிவனடியார்களைக் காணின் "இவர்கள் நமக்கு உயிர்த்துணையானவர்" என்று சமயநெறி வாழ்வார் ஆதரம் பெருக நிற்பர்; தலங்கள்தோறும் எல்லார்க்கும் இல்லை என்னாது அருள் வழங்கி எழுந்தருளியுள்ள இறைவனைக் கண்டு வழிபடும்போழ்து பரிவும், அச்சமும், பணிவும் உடையராயிருப்பர்; "மனவடக்கம், தொண்டு, பிறவுயிர்க் கிரங்கல் முதலிய குணங்கள் நம் முயற்சியாலும், வினைவழி யொழுகும் பிறர் முயற்சியாலும் பிறப்பித்துக்கொள்ளல் இயலாது; இறைவன் அருளாலே தான் பிறக்கவேண்டும்" என்ற துணிவுடனிருப்பர்; அடியார்க் கடிமை செய்தலில் மேன்மேலும் ஆசைப்பட்டிருப்பர்; "எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின், தெய்வ அருட்கருணை செய்யாய்" என்று இறைவன் திருவடி தொழுது நிற்பர்; ஏதேனும் துன்பத்தால் வருந்தும்போது "ஒறுத்தாய் நின்னருளில் அடியேன் பிழைத்தனகள் பொறுத்தாய்" என்னும் ஆரூரர் அருந்தமிழ் உணர்ந்து 'தண்டித்தலும் அருளின் செயலே' என்று தேறியிருப்பர்.

"சாலக்கோயில் உளநின்கோயில் அவைஎன் தலைமேற்கொண்டாடி
மாலை தீர்ந்தேன் வினையுந் துரந்தேன்" (சுந்தரர்)

என்றபடி கோயில் வழிபாட்டிற் காதல் கரைபுரண்டிருப்பர்; சிவநெறி ஒழுகும் வழி வகைகளை யுணர்த்தி யருளும் ஞானாசிரியர்களை ஒருநொடிப் பொழுதும் விட்டுப் பிரியா



திருப்பர்; ஆணவ மல ஆற்றல்கெட இறைவன் கருணையையே எதிர் நோக்கி நிற்பர்; இறையருளால் தேய்ந்தமல ஆற்றலை மீண்டும் வளரவொட்டாது தடுக்கும் அடியார் கூட்டம் புகுந்து இன்புற்று வாழ்வர்.

## சைவத்தமிழ்

தமிழ் உடல்; சைவம் உயிர். சங்க நூல்களும், பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சாத்திரங்களும் நம் சைவ சமய உண்மைகளைத் தெள்ளத் தெளிய விளக்குவன. இன்பம் வீரம் முதலிய சுவைநலங்கெழுமிய செந்தமிழ்ப் பாடல்கள் முடிவில் தெய்வ நறுங்கனித் தீஞ்சாற்றில் தோய்ந்து இன்பஞ் செய்தலை யாவரும் உணர்வர். "தில்லைச் சிற்றம்பலத்துப், பயில்கின்ற கூத்தன் அருள் எனலாகும் பணிமொழிக்கே" என்ற மணிவாசகர் கோவைத் தமிழும், "தேசின் மன்னியென் சிந்தை மயக்கிய, ஈசனாரருள் எந்நெறிச் சென்றதே" என்ற சேக்கிழார் பெருமான் காதல் தமிழும், தெய்வத் தமிழாக மாறிப் பேரின்ப மூட்டுதலை நுணுகி நோக்குவோமாக.

"தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய இலக்கியங்களை ஒரு பொருளாக எண்ணாது, நளன் கதை, அரிச்சந்திரன் கதை முதலிய இலக்கியங்களை விரும்புதல், பாற்கடலுட் பிறந்து அதனுள் வாழும் மீன்கள் அப்பாலை விரும்பாது வேறு பலவற்றை விரும்புதல் போலாம்" என ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் அவர்கள் தாம் இயற்றிய இலக்கணக் கொத்து நூலுரையிற் கூறியுள்ளார். இதனால் நாம் சிவஞானச் செந்தமிழ் நூல்களில் திளைத்து இன்புற்ற நாளே பயன் தரும் நாள் என உணர்தல் வேண்டும்.

வள்ளுவனார் திருக்குறள், அறம், பொருள், இன்பப் என்ற வாழ்க்கைப் பொருள் மூன்றையும் உலகுக்கு வாரி வழங்குகின்றது. மெய்கண்டார் சிவஞானபோதம், இறை

உயிர், கட்டு எனும் உண்மைப் பொருள் மூன்றையும் உலகுக்கு உவந்து உபதேசிக்கின்றது. இவ்விரு பெரும் நூல்களும், சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச் செவ்வனுடியிற் செறித்தினிது விளக்கிச் செல்லும் ஒருமை நலம் சிந்தித்து மகிழத்தக்கதாம்.

சைவத் திருமுறைகள் எழுந்த வரலாறுகளே அவற்றின் பயனைச் செவ்விதின் விளக்கவல்லன. திருமுறைகள் துன்பம் துடைத்து, இன்பம் பெருக்க எழுந்தனவே. அவ்வருட்பாக்கள் உள்ளமுருகிப் பாடுபவர்க்கு அன்று செய்த நலங்களை இன்றும் அருளி வருகின்றன.

“ பண்ணியல் பாடல் வல்லார்கள் இந்தப்
பாரொடு விண்பரி பாலகரே ”
“ செந்தமிழ் வல்லார் சீர்மலிந் தழகார்
செல்வம தோங்கச் சிவனடி நண்ணுவர் ”

என்பன போன்ற சம்பந்தர் அருண்மொழிகள், அவர் அருட்பாக்களைப் பயில்வோர் பெறும் பெருவாழ்வைச் செம்மையாக எடுத்து மொழிதல் காண்க. திருமுறைப் பாடல்கள் மெய்ஞ்ஞானத்தை விளைவிப்பன ; பயில்வோர் மனத்தை நீர்ப்பிண்டமாக உருக்கும் பான்மை யுடையன ; எளிமையும், இனிமையும், அழகும் பொலிவன. இத்தகைய திருமுறைகளை நாடோறும் ஓதி வருதலைச் சைவ இளைஞர்கள் மேற்கொள வேண்டுவது இன்றியமையாததாகும்.

## இளைஞர் மாநாடு

நம் சைவக் கொள்கைகளைப் பரப்ப இளைஞர் மாநாடு கூடுவது மிகவும் ஏற்பதொன்றும். “ கடவுள் வழிபாடு முதுமைக் காலத்து வேண்டப் படுவது ” என்று நினைப்பது பெருந் தவறுகும். “ இளமை தொட்டே சிவபிரானை நினைத்து வருதல் வேண்டும். கிழப்பருவம் அடைந்தபோது சிவ தன்மம் புரிந்து சிவனை யெண்ணும் வீரத்தன்மை



இயலாத செயலாம். இளம் வயதில் நாம் செய்தற்குரிய வாணிபம் இதுவே ” என்று சுந்தரர் நம் நெஞ்சை நோக்கி அறிவுறுத்துகின்றார்.

இக்கருத்தமைந்த பாடல் :

“ புறந்திரைந்து நரம்பெழுந்து நரைத்து நீயுரை யாற்றளர்ந்(து)
அறம்புரிந்து நினைப்பதாண்மை யரிதுகாண் இஃதறிதியேல்
திறம்பியாதெழு நெஞ்சமேசிறு காலைநாமுறு வாணியம்
புறம்பயத்துறை பூதநாதன் புறம்பயந்தொழப் போதுமே ”

என்பது.

இளமையுள்ளத்தில் கடவுட் கொள்கை நன்கு பதிதல் வேண்டும். இளைஞர் இறையருள் பெற்றுப் பேரின்பம் பெற முற்றிலுந் தகுதியுடையவரே.

## நமது பணிகள்

வருங்காலத் தமிழகத்தை வாழ்விக்க வழிகாணும் இளைஞராம் உங்கள் முன் சில பணிகளை நினைவூட்டுகின்றேன். தமிழகத்தில் சமய உணர்வு இன்று குன்றி யிருத்தலை நாம் அறிவோம். சுற்றுப்புற ஊர்கட்குச் சென்று அங்கு வாழும் மக்கட்குச் சமய அறிவையும், சமயப் பழக்க வழக்கங்களையும் எடுத்துச் சொல்வோமாக. நம் சமாஜம் மாவட்டக் கழகம், தாலுக்காக் கழகம், நகரக் கழகம், சிற்றூர்க் கழகம் என அமைக்கப்பெற்று, அன்பர்களைக் கொண்டு பணிபுரிய ஆவன செய்வோமாக. சைவக் கழகங்கள் விரைவில் நிறுவுஞ் செயலை மேற்கொள்வோமாக. இம்முறையில் சைவ இளைஞர்கள் மனவெழுச்சியுடன் பணி செய்தால் சைவ உணர்வு தமிழகத்தில் நிலைத்து நின்று நற்பயன் அளிக்கும்.

அப்பரடிகளின் போற்றித் திருத் தாண்டகம் முதலாயின கொண்டு பரமன் திருநாமங்களைப் பல்காற் கூறி அருச்சித்து இறை வழிபாடு செய்வதே நம் கடப்பாடு என உணர்தல் வேண்டும்.

திருப்புத்தூர்ப் புராணம், சமய குரவர் பிள்ளைத் தமிழ், சீகாழிச் சிலேடை வெண்பா முதலிய அரும்பெரும் நூல்கள் பல இயற்றியவரும், தில்லையில் மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை நிறுவியவரும், சமயமும் மொழியும் வளர்த்து நம்மிடைப் புகழுடலுடன் விளங்குபவருமாகிய காரைக்குடி சித்தாந்தச் செல்வர் ராம. சொ. சொக்கலிங்க ஐயா அவர்கள் 'அருச்சனைப் பத்து' என்னும் அரிய நூல் அருளியிருக்கின்றார்கள். அதில் சமய, சந்தான ஆசாரியர்கள், நம்பி யாண்டார் நம்பிகள், சேக்கிழார் பெருமான் இவர்களின் சரிதங்களும், அருட் செயல்களும், போதித்த சமய ஞானமும் நன்கு விளங்கும் வண்ணம் அருச்சனைகள் அமைந்துள்ளன. எடுத்துக் காட்டாக ஒன்று கூறுவல்.

"செம்மலர் நோன்றாட் சிவமுதல் போற்றி
அம்மலங் கழுவுசீ ரமலா போற்றி
அன்பரொடு சேர்ந்தரு ளரசே போற்றி
இன்பநிலை தந்தரு ளீசா போற்றி
மாலற நேயம் வழங்கிறை போற்றி
மேலையர் வேடம் விளக்கினை போற்றி
ஆலயஞ் சிவமென அருள்பர போற்றி
சீலர்சொன் மெய்கண்ட சிவனே போற்றி."

இது மெய்கண்ட சிவார்ச்சனையில் இறுதிப் பகுதியாகும். இந்நூல் கொண்டு சமயப் பெரியார்களின் திருநாமங்களை நாத்தழும்பேற ஓதி நலம் பெறுவோமாக.

நம் பாரத நாட்டில் வெளித் தோற்றத்தில் பல்வகை வேறுபாடுகள் காணப்பெறினும், அடிப்படைப் பண்பாட்டில் ஒற்றுமை நிலவுவதை யாவரும் உணர்வர். தென்னாட்டை வாழ்விக்குஞ் சைவச் சிறப்பியல்புகளை வடநாட்டில் வாழும் இந்துக்கள் அறியாதவராயுள்ளனர். திருமுறை யருளிய பெரியார்கள், செந்தமிழ் நாட்டில் அவதரித்த சித்தாந்த அனுபூதிச் செல்வர்கள். இவர்கள் வரலாறுகளையும், இவர்கள் இயற்றி யருளிய நூல்களையும்



ஹிந்தி முதலிய வடநாட்டு மொழிகளில் இயற்றி வெளியிடுதல் தற்காலத்துச் செய்யவேண்டிய சிறந்த பணியாகும். ஹிந்தி மொழிப் பயிற்சி மிக்கவராய்த் தமிழ்நாட்டன்பர் பலர் உளர். அவர்கள், தம் தாய்மொழியின் தெய்வச் சிறப்புணர்ந்து சமய நூல்கள் பயின்று இப்பணியிற் புகுந்து சமயத்தைப் பரப்ப வேண்டுகின்றேன்.

மேலும் சமயத் தலைவர்களுக்கு நினைவு விழாக்கள் கொண்டாட வேண்டுவது இன்றியமையாததாகும். இவ்வழியில் நம் சமய சந்தான குரவர்களின் சீர்த்தியைத் தமிழகத்தும்—உலகெங்கும் பரப்புதல் நம்முதற் கடமையாகும்.

## முடிப்புரை

இத்துணையுங் கூறியவாற்றால் சிவநெறியின் தொன்மையும், சிவநெறி மாண்பும், நம் சமயப் பெரியார்கள் மேற்கொண்ட கனிந்த அன்பு நெறியின் சிறப்பும், திருவருள் வாழ்க்கை வாழும் வழிகளும், சமய நெறியில் வாழ்வோர் குணஞ் செயல்களும் சைவத் தமிழின் சீர்மையும், இளமைக் காலத்திலேயே திருவடி நேசம் உளத்திற் பதிதல் வேண்டும் என்பதும், நாம் ஆர்வத்துடன் விரைவில் மேற்கொளவேண்டிய பணிகள் இன்ன என்பதும் ஒருவாறு விளக்கப்பட்டன,

சீலமிக்க இச்சான்றோர் பேரவைக்கு மீண்டும் என் உளங்கலந்த வணக்கத்தைப் புலப்படுத்திக் கொள்கின்றேன். இங்கு இதுவரை பேசவைத்த திருவருளை வந்தித்து வாழ்த்தி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

சீர்வாழி தெய்வ சிகாமணி சீருணை
யூர்வாழி வாழி யுலகெல்லாம்—கார்வாழி
சித்தமிழ்த மானசிவ வாகமம் வாழிசெழு
முத்தமிழும் வாழி முறை.

## சமாஜ வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெரியபுராணம்—அகராதியுடன் ... | 3 | 0 |
| நாலாயிரதிவ்ய பிரபந்தம் ... | 3 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ... | 1 | 0 |
| திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 1 0 திருவாசகம் மூலம் ... | 0 | 4 |
| திருவாசகத் திரட்டு .... | 0 | 6 |
| கந்தரநுபூதி (உரையுடன்) 0 2 முருகன் முந்நூல்.... | 0 | 3 |
| அப்பர் திரட்டு 6 பை சம்பந்தர் திரட்டு .... | 0 | 1 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை .... | 0 | 12 |
| திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு | 7 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) ... | 0 | 8 |
| சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல. ... | 0 | 2 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

### குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்) ஒன்று ஒரு ரூபா வீதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணா வீதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை

16878